விலை சதம் 50

பக்கங்கள் — 10

சகலவித பல் வியாதிகளையும் போக்கவல்லது
அண்ணா பற்பொடி
இலங்கையின் எப்பாகத்திலும் கிடைக்கும்.
கூடுதலாக அண்ணா பற்பொடியை வாங்கும் வியாபாரிகளுக்கு விசேடகழிவுண்டு
அண்ணா தொழிலகம்
இணுவில்
தொலைபேசி: 7412

# ஈழநாடு
## வார மலர்
THE EELANADU VARAMALAR

மில்க்வைற் தொழிலகம்
வர்த்தகப் பெருமக்களுக்கு ஒருபணிவான வேண்டுகோள். தயவுசெய்து எங்கள் தயாரிப்புக்களை உரிய மேலுறைகளோடு விற்பனைசெய்து ஆதரவு நல்குங்கள்.
-தொழிலதிபர்

மலர் 20 புரட்டாதி 15 ஷவ்வால் 27 ஞாயிற்றுக்கிழமை (1—10—78) இதழ் 232

# ஜனாதிபதி ஆணைக்குழு இடைக்கால அறிக்கை

# ஜனாதிபதியிடம் கையளிப்பு!

(கொழும்பு)

ஜனாதிபதி விசேஷ விசாரணைக்கமிஷன்தனது இடைக்கால அறிக்கையை நேற்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனவிடம் கையளித்தது

இந்த அறிக்கையை கமிஷன் தலைவர் நீதியரசர் வீரரத்ன ஜனாதிபதியிடம் கையளித்தார்

இடைக்கால அறிக்கை கையளிக்கப்படும் பொழுது கமிஷனின் மற்றைய உறுப்பினர்களான நீதியரசர்கள் சர்வானந்தா, நீதியரசர் கே சி டி அல்விஸ் ஆகியோரும் உடனிருந்தனர்

# பாப்பரசரின் இறுதிச்சடங்கு புதன்கிழமை

வத்திக்கான், செப். 30

காலஞ்சென்ற பாப்பரசர், முதலாவது அருளப்பர் சின்னப்பரின் இறுதிச் சடங்குகள் அக்டோபர் மாதம் 4-ம் திகதி புதன் கிழமை மாலை 4 மணிக்கு செண். பீட்டர்ஸ் சதுக்கத்தில் நடைபெறும்.

பாப்பரசரின் மாளிகையில் வைக்கப்பட்டிருந்த அன்னாரின் பூதவுடல் இன்று இரவு செண். பீட்டர்ஸ் தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

நேற்று மட்டும், மறைந்த பாப்பரசருக்கு ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தியதாக வத்திக்கான் செய்திகள் தெரிவித்தன.

காலஞ்சென்ற பாப்பரசரின் மரணச்சடங்கு முறைகள் மற்றும், புதிய பாப்பரசர் தெரிவு பற்றி இன்று 29 கருதினால் மார்கள் கூடிவிரிவாக ஆராய்ந்தனர்,

புதிய — 264-வது- பாப்பரசர் அக்டோபர் மாதம் நடுப்பகுதியில் தெரிவு செய்யப்படுவார்.

## மே. வங்க வெள்ளத்தில் 400 வீரர்களை காணவில்லை!

புதுடில்லி, செப் 30

மேற்கு வங்காளத்தில் வெள்ள நிவாரண வேலைகளில் ஈடுபட்டிருந்த நாநூறு இந்திய இராணுவவீரர்களைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது

மேற்கு வங்காளத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் இதுவரை 250 பேர் உயிரிழந்தனர்

மீட்பு மற்றும் நிவாரண வேலைகளில் ஈடுபட்டிருந்த 400 இராணுவவீரர்கள் வடபகுதியிலிருந்து தென்பகுதி நோக்கிச் செல்கையிலேயே காணாமற்போய் விட்டனர் என்று அறிவிக்கப்பட்டது



வழி மீது விழி வைத்து
வடிவேலன் தனை எண்ணி
எழில் மங்கை சிலையானாள்,
எதிர்கொள்ள வருவானோ!

(செல்வி பால சுலோஜனியின் ஒரு நடனத் தோற்றம். செய்தி 10-ம் பக்கம்.)

## "தேங்கிக்கிடந்த 18,000 வழக்குகளை மாதம் 500 வழக்கு வீதம் விசாரித்து முடித்தேன்"

### பிரியாவிடையில் நீதவான் நவரத்தினம்

(யாழ்ப்பாணம்)

"இந்த நீதிமன்றத்திலே ஏறக்குறைய 18,000 வழக்குகள் தேங்கிக்கிடந்தன. அந்த வழக்குகளை நான் மாதமொன்றுக்கு 500 வழக்குகள் வீதம் இருபது மாதங்களில் எனது நேரத்தையும் பொருட்படுத்தாது மனித நீதிக்கும் கடவுள் ஆசிக்கும் சமுதாய நீதிக்கும் நன்மைக்குமாகச் செயற்பட்டுமுடித்தேன்."

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் தமக்களிக்கப்பட்ட பிரிவுபசாரத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் இளைப்பாறிச் செல்லும் நீதவான் திரு. கே. வி. நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்றுக்காலை சட்டத்தரணிகளாலும், நீதிமன்ற உத்தியோகத்தர்களாலும், ஊழியர்களாலும் அளிக்கப்பட்ட பிரிவுபசாரத்தில் திரு. நவரத்தினம் மேலும் கூறியதாவது:-

"நான் தேங்கிக்கிடந்த வழக்குகளை விசாரணைசெய்ததை எனது தொண்டாகக் கருதினேனேயொழிய பேருக்காகவோ, வேறு நயத்துக்காகவோ செய்யவில்லை."

"இந்த நீதிமன்றத்தில் இவ்வளவு காலம் கடமையாற்றும் பொழுது என் கடமையை இலகுவாகச் செய்ய ஒத்துழைப்புத் தந்து, கடமையுணர்ச்சியுடன் நீங்கள் எப்பொழுதும் நடந்துகொண்டதனால்தான் அத்தனை வழக்குகளையும் முடிக்கக்கூடியதாக இருந்தது. இந்த வழக்குகளை முடிக்க அலுவலக ஊழியர்களும், பதிவேட்டறை ஊழியர்களும் பெரும் உதவி

(10-ம் பக்கம் பார்க்க)

காணி விற்பனைக்கு
இருபாலைச் சந்திக்கருகாமையில் இருபத்திரண்டு பரப்புக்காணி.
வே. சண்முகம், பன்னாலை, தெல்லிப்பளை. 0459

# லண்டனில் நடைபெறும் தமிழாராய்ச்சி மகாநாடு

## நிர்வாகக்குழு இன்று யாழ் நகரில் கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக்கிளையின் நிர்வாகக்குழு இன்று காலை யாழ்ப்பாணத்தில் கூடுகிறது அடுத்த ஜுலை மாதத்தில் லண்டனில் நடைபெறும் ஐந்தாவது தமிழாராய்ச்சி மாநாடு பற்றி இந்த நிர்வாகக் குழு இன்று விரிவாக ஆராய்ந்து சில முக்கிய முடிவுகளை மேற்கொள்ளும்.

அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளைத் தலைவர் பேராசிரியர் சு வித்தியானந்தன் தலைமையில் நடைபெறும் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் வண. தனிநாயகம் அடிகள், திரு வி எஸ். துரைராஜா, திரு. ஜேம்ஸ் இரத்தினம், டாக்டர் இந்திரபாலா திரு. ச. அம்பிகைபாகன், திரு. க. சச்சிதானந்தன், திருமதி பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

அடுத்த வருடம் ஜுலை மாதத்தில் லண்டனில் நடைபெறும் ஐந்தாவது தமிழாராய்ச்சி மாநாடு பற்றி இன்றைய நிர்வாகக்குழுக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும்,

லண்டன் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு, லண்டன் பல்கலைக்கழக பேராசிரியர் மார், கேம்ப்பிரிட்ஜ் பல்கலைக்கழக பேராசிரியர் அஷர் ஆகிய இருவரும் அமைப்பாளர்களாக உள்ளனர்.

உத்தேச லண்டன் தமிழாராய்ச்சிமாநாடு பற்றி இலங்கைக்கிளையின் முக்கிய உறுப்பினர் ஒருவர் "ஈழநாடு" விடம்

(10-ம் பக்கம் பார்க்)

விஜயவீர காயமுற்ற சம்பவம்:

# ஜே. வி. பி. வடபகுதி அமைப்பாளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ். முற்றவெளியில் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணிக் கூட்டத்தின் போது திரு. ரோகண விஜய வீரா கல்வீச்சினுல் காய மடைந்த சம்பவம், ஒரு சில சந்தர்ப்பவாத முதலாளித்துவ சக்திகளினுல் ஏவப்பட்ட ஓர் அறிவற்ற மனிதரின் செயல் என்று மேற்படி இயக்கத்தின் அமைப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் வடபிரதேச தற்காலிக அமைப்பாளர்களில் ஒருவரான பொன்சேக்கா மேற்படி சம்பவம் பற்றி மேலும் குறிப்பிடுகையில் கல்லெறிந்த மனிதர் மீது எந்தவித குரோதமோ கோபமோ தங்களுக்குக் கிடையாது என்றும் இச்சம்பவம் தொடர்பாக வடபிரதேச மக்கள் மீது பழியைப் போடத் தாங்கள் தயாராயில்லையென்றும் அதற்கு மக்கள் பொறுப்பானவர்கள் அல்லவென்றும் சொன்னுர்.

இந்த நாட்டிலுள்ள ஏனைய தனிப்பட்ட அரசியல் தலைவர்கள் எவருடனும் தங்களுக்குத் தொடர்புகிடையாதென்றும் மக்கள் மத்தியில் தங்கள் கொள்கைகளை எடுத்துக்கூறி அவர்களின் ஆதரவை பெறுவதே கொள்கையென்றும் அவர் விளக்கினுர். மக்களிடமே தாங்கள் பூரண நம்பிக்கை கொண்டிருப்பதாகவும் எந்தவொரு பயங்கரவாத சக்திகளிலும் தங்களுக்கு நம்பிக்கையில்லையென்றும் அவர் கூறினுர்.

## வி. பி.யின் அறிக்கை பற்றி

அன்றைய கூட்டத்தில் 'செந்தமிழர்' இயக்கத்தலைவர் திரு. வி. பொன்னம்பலம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட விமர்சனம் பற்றியும் அதற்கு திரு. பொன்னம்பலம் விடுத்த அறிக்கை பற்றியும் குறிப்பிட்ட திரு. பொன்சேக்கா, 'செந்தமிழர்' இயக்கத்தின் அங்கத்தவர்களால் பரவலாக்கப்பட்ட கருத்துக்களுக்கே தங்கள் மேடைகளில் பதிலளிக்கப்பட்டதாகவும் மற்றப்படி தாங்கள் எதுவும் சோடித்துக் கூறவில்லையென்றும் அவ்வாறு சோடித்துக்கூறுவது மார்க்ஸிஸ-லெனிஸ வாதிகளுக்கு முரணுகும் என்றும் சொன்னுர்.

திரு. வி. பொன்னம்பலம் தமது பத்திரிகை அறிக்கையின் இறுதிப்பகுதியில் 'இலங்கையிலுள்ள மார்க்ஸிஸ-லெனினிஸ வாதிகளே பேரினவாத நிர்ப்பந்தத்திற்கு அடிபணிந்து, முன்பு மறுத்து, தயங்கியபின் தாமதித்து ஏற்று, தமிழரின் சுயநிர்ணய உரிமையை அரைமனதுடன் அங்கீகரிக்க முன்வருவது வேதனைக்குரியதாகும் என்று குறிப்பிட்டுள்ளதைச் சுட்டிக் காட்டிய திரு. பொன்சேக்கா, இந்த நிலைமைக்கு 43 வருடகால இடதுசாரி இயக்கத்தினரதும், 40 ஆண்டுகால முதலாளித்துவத்தினதும் சரித்திரம் வகைசொல்லவேண்டுமே தவிர அவர் கூற்றுக்கு லெனினிஸ-மார்க்ஸிஸ வாதிகளான நாம் பொறுப்பேற்க முடியாது என்ருர்.

அவர் கூறும் இடதுசாரி இயக்கத்தில் ஒருவராகவே அவர் இருந்துள்ளார். 1953-ம் ஆண்டு மக்கள் எழுச்சியின் போதும், 1966-ம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டத்தின் போதும், 1956 ஜனவரி 8-ல் தமிழ்மொழி விசேஷ சரத்துக்கள் மசோதாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய போதும் இடதுசாரி இயக்கங்கள் நடந்துகொண்ட விதம் மக்கள் அறிந்ததே. அந்தச் சமயங்களில் திரு. வி. பொன்னம்பலமும் அந்த இடதுசாரி இயக்கங்களில் ஒருவராகவே இருந்துவந்துள்ளார்.

(9-ம் பக்கம் பார்க்க)

## கேள்வி அறிவித்தல்

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தில் 10,000 வெற்றுச் சாக்குகள். கழிவு மா, கழிவு சீனி, பழுதடைந்த 45 கலன் வெற்று பரல்கள்-100. பழுதடைந்த 4 கலன் வெற்று தகரங்கள் 100 கேள்விப்பத்திர மூலம் விற்பனைக் குண்டு. ரூபா 250/- தலைமைக்காரியாலயத்தில் செலுத்திக் கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும். கேள்விப்பத்திரம் 78-10-05-ம் திகதி வியாழக்கிழமை பகல் 2-30 மணிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். தபால் உறையில் இடது பக்கத்தில் "சாக்கு கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடல்வேண்டும். கேள்விப்பத்திரம் 78-10-05 வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு சங்க உபசபையினரின் முன்னிலையில் திறக்கப்படும்.

**பொதுமுகாமையாளர்,**
தெல்லிப்பளை
ப. நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பளை.

1978-09-78.

0466

## பருத்தித்துறை நகரசபை கேள்வி விளம்பரம்

மாட்டிறைச்சிக்கடை இல.7 சந்தை உள் கடை அறை இல. 56.

சந்தை வெளிக்கடை அறைகள் இல. 16, 17, 18, 29.

மேற்குறிப்பிட்ட கடைகளை வாடகைக்குப் பெறவிரும்புவோர்களிடமிருந்து 1978-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11-ம் திகதி முற்பகல் 10-00 மணி வரையும் அரக்கு முத்திரையிட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பிணைப்பணம் ரூபா 150/-ம் பத்திரப்பணம் ரூபா 10/-ம் செலுத்தி 10-10-78 நண்பகல் 12-00 மணிவரை கேள்வி நிபந்தனைப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பத்திரப் பணம் மீளளிக்கப்படமாட்டாது. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

**அன்ரன் அல்பிரட்,**
விசேட ஆணையாளர்,
பருத்தித்துறை நகரம்.
நகரசபை அலுவலகம்,
பருத்தித் துறை,
28-09-78.

0461

## தேவை

யாழ் மாநகரசபை எல்லைக்குள் 5 பரப்புக் காணி வீட்டுடன் அல்லது 10 அல்லது 15 பரப்பு வெறுங்காணி பிரதான வீதியோரத்தில் தேவை. உடனடியாக கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 0439, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 0439

15 அல்லது 20 பரப்புக் காணி திருநெல்வேலி சுற்றுடலில் பிரதான வீதியோரத்தில் தேவை. உடனடியாக கடித மூலம் தொடர்பு கொள்ளவும. விளம்பர இல: 0440, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 0440

சேற் கிறில் வேலையில் அனுபவமுள்ள எலக்ரிக் வெல்டர் இருவர் தேவை. திங்கள் நேரில் சந்திக்கவும். சி. சுப்பையா, சாரையடி, புலோலி. 0450

அனுபவமும் திறமையும் வாய்ந்த வெல்டேர்ஸ், ரின் சேர்ஸ், பெயின்டேர்ஸ் உடனடியாக தேவை. திறமைக்கேற்ப வேதனம் வழங்கப்படும். தொடர்பு கொள்ளவும். 77, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 0449

வேலைக்குப்பையன் தேவை. வீட்டு வேலைகளுடன் சமையல் வேலையும் செய்யக்கூடியதாக இருத்தல் அவசியம். அத்துடன் வேறு எங்கேயும் வேலை செய்திருந்தால் நற்சாட்சிப்பத்திரங்களுடன் தோற்றமளிக்கவும். சி. எஸ். கே. மில்ஸ், 11, கே.கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 0430

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் அல்லது யாழ்ப்பாணத்திலிருந்து ஐந்து மைல் சுற்றுடலுக்குள் சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒப்பந்த அடிப்படையில் பிரபல சட்டத்தரணிக்கு வாடகைக்குத் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 0467, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 0467

# வரி விளம்பரம்

## தேவை

மலைநாட்டில் பிரசித்தி பெற்ற அம்மன் தேவஸ்தானத்திற்கு உதவிக் குருக்கள் தேவை. விண்ணப்பிக்க: விளம்பர இல: 0433, C/o. ஈழநாடு லிமிட்., யாழ்ப்பாணம். 0433

சுண்டிக்குளி, நல்லூர், வண்ணார்பண்ணை போன்ற இடங்களில் (யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையில்) உத்தியோகத்திலிருக்கும் இளம் ஆண் ஒருவருக்கு உணவுடன் தனி அறை தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 0419, C/o. ஈழநாடு லிமிட்., யாழ்ப்பாணம். 0419

உயர் வகுப்புகளுக்கு, கணிதம் கற்பித்தற்குரிய ஆசிரியர் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். அதிபர், மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு. 0465

## விற்பனைக்கு

உடுவில் சித்தாவத்தை 24 பரப்பு தென்னங் காணி. தொடர்பு கொள்ளும் விலாசம்: திரு. செல்வத்துரை தருமரத்தினம், மருதனுமடம். 0417

4 சிறி இற்ருலியன் லம்விருற்ரு ஸ்கூட்டர். தொடர்பு: வ. க. சம்பந்தன், மலைவேம்படி, சுதுமலை தெற்கு, மானிப்பாய். 0432

பரந்தன் — முல்லைத்தீவு ரோட்டில் அருகாமையிலிருக்கும் தேவிபுரத்தில் 20 ஏக்கர் தென்னைக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு வே. சுப்பிரமணியம், 85 கதிரவேற்பிள்ளை வீதி, புலோலி மேற்கு, பருத்தித்துறை. 0444

6 ஸ்ரீ 2000 தொடர் பேஜோ கார் சவ்வரி (Safari model) உடனே விற்பனைக்கு உண்டு. ஒக்டோபர் 1-ந் திகதி தொடக்கம் பார்வையிடலாம். 125, 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 0454

கரம்பொன் சின்னமூளாய் ஆஸ்பத்திரிக்கு அருகாமையிலும் பெரியதெரு முன்பக்கமும் உள்ள 16 பரப்புக்காணி. தொடர்பு கொள்ளவும். டாக்டர் பாலசுப்பிரமணியம், அரசினர் வைத்தியசாலை, ஊர்காவற்றுறை. 0423

அளவெட்டி அழகொல்லைப் பிள்ளையார் கோயிலுக்கு பின்புறமாகவுள்ள பெத்தாவளை வீதியில் மின்சாரவசதி பெற்று வீடுகட்டக் கூடிய 5½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. 12 ஆயிரம் ரூபாவுக்கு மேல் விலை கோருவோர் நேரிலோ, எழுத்து மூலமோ தொடர்பு கொள்ளவும். திருமதி ஞா. சுவாமிநாதபிள்ளை, இல. 3, ஜெயந்தி நகர், கிளிநொச்சி. 0431

சாவகச்சேரி சங்கானை பஸ் ஓடும் ரோட்டில் வீடு கட்டுவதற்கு அத்திவாரம் (D.P.L) போட்ட நல்ல தண்ணீர் கிணற்றுடன் குடியிருப்புக்காகிய சிறந்த காணி தொடர்பு கொள்ளவும்: M பாலசிங்கம், "நல்லார் பாம்", கெருடாவில், சாவகச்சேரி. 0453

கலப்பற்ற அல்ஷேசன் குட்டிகள் உண்டு. (இன விருத்திக்காக சிறந்த ஆண் நாய்களும் உண்டு) க. நடேசன், 15, மலர்மகள் வீதி, அரியாலை 0463

## விற்பனைக்கு

கிணறும் சுற்றுமதிலும் உள்ள அரை ஏக்கர் பரப்பளவு கொண்ட வளவம் வீடும், அநெக்ஸ்உம் கெருடாவிலில் (தொண்டமனுறு) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: ஆர். இராமச்சந்திரன், 47, வங்கசாலை வீதி, யாழ்ப்பாணம். 0451

பளை, கரடியன் காடு, தென்னந்தோட்டம் 39 ஏக்கர். 1,800 மரங்களும், 30 மா மரங்களும் உண்டு. வயது 15—8 வருஷங்கள். வாகனப் போக்குவரத்து வசதி உண்டு. விலை 75,000/- தொடர்பு: இல. 33, இரத்னுகர இடம், தெஹிவளை. 0436

சாவகச்சேரியில் தபால்கந்தோர் வீதியில் ஸ்கந்தா அக்கெடமிக்குப் பின்னுல் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சி. அப்புத்துரை, இளைப்பாறிய ஆசிரியர், உரும்பராய். 0462

7 ஸ்ரீ 9000 தொடர் பேஜோ 404 கார் சவ்வாரி (Safari model) மூன்று மீற்றர் (3 meters) பச்சை நிறம், லண்டனில் இருந்து கொண்டு வரப்பட்டது. உடனே விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ஆலாலசுந்தரம், துரைஐயா அவனியூ, அச்சுவேலி. 0468

## மரண அறிவித்தல்

**சீ. இரத்தினசபாபதி**

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற ப. சி. சீவரத்தினம் தம்பதிகளின் மகனுகிய திரு. இரத்தினசாபபதி அவர்கள் காலமாகி விட்டார். இவர் இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாக கணக்குப் பரிசோதனை அத்தியட்சகரும், மகேஸ்வரியின் அருமைக்கணவரும், இராஜ்குமார், இராஜ்சேகர், இராஜ் சங்கரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் அவரது இணுவில் கே. கே. எஸ். வீதியிலுள்ள 'இராஜ்கொற்' இல்லத்தில் நடைபெற்று, 3 மணியளவில் பூதவுடல் இணுவில் பூவோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 0469

TOSHIBA | ரொஷிபா

குளிர்சாதனப் பெட்டிகள் -- மேசை விசிறிகள்
அழகையும் சிக்கனத்தையும் வழங்குகின்றன
உங்கள் இல்லங்களுக்கு மற்றுமொரு தேவை

★ ரொஷிபா குளிர்சாதனப் பெட்டி
★ ரொஷிபா மேசை விசிறி

சர்வதேச தரத்திலான முழுமையான இறக்குமதி செய்யப்பட்ட குளிர்சாதனப்பெட்டி

HITACHI — மேசை விசிறிகள்

பல அளவுகளிலும் இறக்குமதியாகியுள்ளன.
யாழ்நகரில் தாராளமாகக் கிடைக்கின்றன.
நேரடி இறக்குமதியாளர்கள்:

சி. சின்னத்துரை அன் பிறதர்,
யாழ்ப்பாணம் - - போன்: 284

இப்பொழுது வாங்கலாம்

பிரவுண்சனின் இன்னுமோர் தரமான தயாரிப்பு
பிரவுண்சன் அரறூட்மா

இறக்குமதிசெய்து விநியோகிப்பவர்கள்:
பிரவுண்சன் இன்டஸ்ரீஸ்
80 1/4 பிஷறல் பிளேஸ்
கொழும்பு 12.
தொலைபேசி; 27197




பிரவுண்சன் அரறூட்
அரச உணவு மருந்துச் சட்டத்தின் கீழ் உத்தரவாதப் படுத்தப்பட்டது.

Ariyaratne Veyangoda

# மறுபடியும் காந்திஜி!

**பணக்காரனாலும் ஏழையானாலும் சத்தியத்தைக் கொலைசெய்யும்போது மட்டும் பேதமில்லாமல் செயல்படுகிறார்கள். என்னைமாதிரி கோழைகளால் இந்தஉலகை சீர் படுத்தமுடியாது. அதனால் காந்தி மகானே! நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும்''**

இரண்டு நாட்களாக என்னுடைய மனம் எதிலுமே நிலைக்கவில்லை அக்கிரமத்தை மறைத்த என்னை என் மனச்சாட்சி உறுத்திற்று. கடந்த அந்த இரண்டு இரவுகளிலும் சாப்பிடாமல் தூக்கம் வராமல் புரண்டு படுத்துக்கொண்டும் முகட்டை முறைத்துப் பார்த்துக்கொண்டும் நான் அமைதியற்றிருந்ததைக்கண்ட என் மனைவி அன்போடு சொன்னாள். ஆதங்கத்தோடு கடிந்து கொண்டாள்.

''ஆரோ அயோக்கியத்தனமாய் நடந்ததுக்கு வேறஆரோ பலியாயிச்சினம். அதுக்காக நீங்கள் உங்களை வருத்திக் கொள்ளுறதால ஆருக்குஎன்ன நன்மை வரப் போகுது... உங்களுக்கு ஏதும் பாதிப்பு வந்திருந்தாலும் பரவாயில்லை இப்ப நீங்கள் கவலைப்படுறதால என்ன லாபம்?''

அவள் பேச்சின் நடுவே குறுக்கிட்டேன். ''பாதிப்பு வராமல் வேற என்ன வந்திருக்கு. உண்மை எதெண்டு தெரிஞ்சும் அதை நான் மறைச்சதாலை இப்ப ஒரு ஏழை... சிதம்பரம்... பாவம் கண்ணீர் வடிக்கிறான். இதைவிட மனசுக்கு வேற பாதிப்பு தேவையே...? என் கண்கண்டதைப் பொலிசுக்கு நான் சொல்லி இருந்தால் சிதம்பரத்துக்கு இந்தநிலை வந்திருக்குமே''—என்றேன்.

''சரி... அப்ப நீங்கள் ஊருக்காகக் கவலைப்பட்டு வருத்தத்தையும் கார்த்திகேசின்ரை பகையையும் தேடிக் கொள்ளுங்கோ. நானும் ரண்டு பிள்ளையளும் இருக்கிறம் எண்டதை மறந்துடுங்கோ'' என்று சொல்லியவாறே போய்விட்டாள் என் மனைவி

ஆமாம், அவள் சொன்னது வாஸ்தவம், நினைத்த மாத்திரத்தில் என்இச்சைப்படி நடந்துகொள்ளக்கூடிய நிலையில் நான் இல்லை. சத்திய வாழ்க்கை வாழ்வதற்காக என்னைத் தியாகம்செய்ய நான் தனிமனிதனல்லன். பணக்காரன் கார்த்திகேசுவுடன் மோதி என்னை அழித்துக் கொண்டால் அப்புறம் என் வீட்டு விவகாரத்தைக் கவனிப்பது யார்?

எதிரே தெரியும் 'சைக்கிள் றிப்பேர்' கடைமீதும் அதற்குப் பின்னே உள்ள மூலைக் குடிசையிலும் என்பார்வை படர்கிறது. அது, சிதம்பரத்தின் குடிசை. சிதம்பரம், பாவம் உழைத்துப் பிழைப்பவன். அவனுக்கு ஏன் இந்தக்கதி வரவேண்டும்? 'கேமரா'வைத் திருப்புவதுபோல் என் கண்களைப் பக்கவாட்டில் திருப்புகிறேன். நெடிதுயர்ந்து நிற்கும் 'அசோகா' மரங்களும் அதற்குப் பின்னால் தெரியும் 'டிஸ்டெம்பர்' வண்ணம் பூசப்பட்ட இரண்டடுக்கு மாளிகையும் என் கண்களில் படுகின்றன. 'ஓவலோ' 'ஹார்லிக்ஸோ' குடித்துக் கொண்டு பல்கனியில் அமர்ந்திருக்கும் கார்த்திகேசுவின் மகன் என் கண்களுக்குத் தோன்றுகிறான். கார்த்திகேசுவின்மேல் எனக்கு உள்ளூரக் கோபம் இருந்தபோதிலும் உள்ளூரத்தான்...— அதை வெளிக்காட்டுவதற்கு எனக்குத் துணிவில்லை. அவன் மகனிடம் எனக்கு ஆத்திரமில்லை. மீண்டும் அவனைக் கவனிக்கிறேன். பணக்காரன்...... இரவின் மென்மையான ஸ்பரிசத்தைக் கொஞ்சம் உயரத்திலிருந்து அனுபவிக்கிறான்.


என் பார்வை மீண்டும் சிதம்பரத்தின் குடிசையிடம் தாவுகிறது. சைக்கிள் கடைத் தாழ்வாரத்தில் ஒட்டிய வயிறுடன் குந்தியிருக்கும் சிதம்பரத்தின் மகன் என் கண்களில் தென்படுகிறான். சிதம்பரம் பொலிசுக்குப் போயிருந்தால் 'சைக்கிள்'கடை வருமானம் தடைப்பட்டிருக்கும் அதனால் அவர்கள் வீட்டு அடுப்பு எரிந்திருக்காது. சிதம்பரத்திடமும் அவன் குடும்பத்தினரிடமும் எனக்கு அனுதாபம் பிறந்தது. அங்கே உணவு சமிக்க 'ஓவல்'; இங்கே ஒட்டிய வயிறுகள். பணக்காரனாக இருப்பது தப்பு என்று நான் துளியேனும் நினைக்கவில்லை. ஆனால் கார்த்திகேசு கொஞ்சம்பண்புள்ளவனாகவும் நடக்கத்தெரிந்துகொள்ளலாம்.

என் மனதை இவ்வளவு தூரம் அலைக்கழிக்கும் அந்த சம்பவத்தை நினைத்துப் பார்க்கிறேன்.

என் வீட்டுக்கு நேரெதிரே சிதம்பரத்தின் சைக்கிள் ரிப்பேர் கடையும் குடிசையும் உண்டு. 'சைக்கிள் ரிப்பேர்' கடையில்வரும் வருமானத்தில் சிதம்பரமும் அவன் மனைவியும், ஐந்து பிள்ளைகளும் ஜீவனம் நடத்திவந்தார்கள்.

அவர்கள் குடிசைக்குப் பக்கத்தில் முதலாளி கார்த்திகேசுவின் மாளிகைபோன்ற மனை இருக்கிறது. கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் அவருக்குக் கடைகள் உண்டு. பிரமுகர் என்றும் பெரிய மனிதர் என்றும் அவரை அழைப்பார்கள். என் மனதுக்குள் உயர்ந்தவர் என்ற 'கேரக்டரை'த் தான் நானும் கொடுத்திருந்தேன். புலி புல்லைத் தின்னுமோ என்னவோ அந்த உயர்ந்தவராலும் கீழ்த்தரமான செயலைச் செய்யமுடியுமென அவர் நடத்தை எனக்கு உணர்த்திற்று.

எங்கள் வீட்டுக்கு வலது பக்கத்திலுள்ள குடித்தனக்காரர்கள் வெளியூர் போகும்போது தங்கள் வீட்டின்



திலை பழியைப் போடுறளவுக்குத் துணிஞ்ச அந்தாள் தன்ரை அந்தரங்கத்தை அம்பலப்படுத்தின உங்களைலேசிலை விட்டிடுவாரே... சிதம்பரமோ இல்லை நாங்களோ உங்களுக்கு முக்கியமெண்டு யோசிச்சுப் பாருங்கோ'' என்றாள்.

உண்மை தெரிந்திருந்தும் ஊமையானேன் நான்.

இதுதான் என் மனப் போராட்டத்துக்குக் காரணம். இன்று மாலை சிதம்பரம் பிணையில் விடுதலையாகியிருந்தான்.

நாளைக்காலை அவனைப் போய் பார்க்க வேண்டும். உண்மையை வெளியே சொல்லத்தான் முடியவில்லை. எனக்கு முடிந்த சிறு உதவி யாவது சிதம்பரத்துக்குச் செய்ய வேண்டும். ஏழைகளாக இருந்தாலும் சத்தியத்துக்கு சார்பாக, நேர்மையாக, தொழிலில் உண்மையாக இருக்க வேண்டுமென விரும்புபவன் நான். கார்த்திகேசு... எவ்வளவு பெரிய முதலாளி. அந்த மனுஷனுக்கு ஏன் இந்த அற்ப புத்தி வந்ததோ?

அதிகாலை விடிந்ததும் விடியாததுமாக, வீட்டுச் செலவுக்கு வைத்திருந்த நூறு

## உடுவில் ஜே. என். இன்பராஜன்

பொறுப்பை கார்த்திகேசுவிடம் கொடுத்துவிட்டுப் போயிருப்தார்கள். அவரும் முகம் சுளிக்காமல் அவர்களுக்கு ஒத்தாசை பண்ண முன்வந்தார். தன்னுடைய வீட்டைப்போல் அந்த வீட்டையும் கவனித்தார். மாலை வேளைகளில் வேலையாள் ஒருவனோடு வந்து பூஞ்செடிகளுக்கு நீர் இறைப்பார். இவ்வாறே மூன்று நான்கு நாட்கள் கழிந்தன. ஒருநாள் அந்திசாயும் நேரம் கூலியாட்கள் சிலருடன் அந்த வீட்டுக்குவந்தார் கார்த்திகேசு. வாயில் கதவைத் திறந்தார். வீட்டைச் சுத்தம் செய்யப்போகிறார்களாக்கும் என்று நினைத்தேன். ஆனால் அவருடைய கூலியாட்கள் கதிரைகள், மேசைகள், 'சோபாசெட்' எல்லாவற்றையும் தூக்கிச் சென்று லொறியில் ஏற்றுவதைக் கண்டேன். எனக்கு உடனடியாக என்ன நடக்கிறது என்று ஊகிக்க முடியவில்லை. சாமான்களை 'முழுங்கிய லொறி' தெருவில் ஓடி மறைந்தது. கூலியாட்களுடன் தாழ்ந்த சத்தத்தில் பேசிய கார்த்திகேசு வீட்டின் கதவைப்பூட்டாமலேயே விட்டுச் சென்றார்.

நான் கண்டவற்றை சிதம்பரத்திடம் சொல்லி மேலும் துருவி ஆராயலாம் என்று அவன் வீட்டுக்குப் போனேன். 'சிதம்பரமும் அவன் மகனும் 'டவுனு'க்குப் போய்விட்டார்கள், இன்னும் வரவில்லை.' என்று அவன் மனைவி சொன்னாள். 'லொறி' வந்து, நின்று போன சங்கதி எதையும் அவர்கள்கவனிக்கவில்லைஎன்று துல்லியமாகத் தெரிந்தது

மறுநாள் மாலை-கார்த்திகேசுவின் பொறுப்பில் விடப்பட்டிருந்த எங்கள் அயல் வீட்டின் பொருட்களைக் களவாடிய குற்றத்திற்காக சிதம்பரத்தைப் பொலிஸ் கைது செய்தது. அவன் மனைவியும் பிள்ளைகளும் அழுதார்கள், அரற்றினார்கள்.

என் கண்கள் கண்டதை உண்மையான கள்வன் யாரென்பதை பொலிசுக்கு சொல்ல விரைந்த என்னை என் மனைவி தடுத்தாள். 'கார்த்திகேசுவின் பகைக்கு ஆளாகாதையுங்கோ. தான், சாமான்களை எடுத்து வித்துப் போட்டு, தன்ர பணபலத்தைக் கொண்டு சிதம்பரத்

ரூபா 'நோட்டு'டன் சிதம்பரத்தைப் பார்க்கப் போனேன். 'சைக்கிள் ரிப்பேர்' கடை திறந்திருந்தது. அதற்குச் சற்றே தள்ளி, குனிந்து நின்று றோட்டில் ஏதோ செய்து கொண்டிருந்தான் சிதம்பரம். உன்னிப்பாகக் கவனித்தபோது... எனக்குப் 'பகீ'ரென்றது. சில ஆணிகளைக் கூர்ப்பாகம் மேலே இருக்கும்படி அடுக்கிக் கொண்டிருந்தான் அவன். பின்பு அமைதியாகக் கடைக்குத் திரும்பினான். தூரத்தே ஒருவன் சைக்கிளில் வந்து கொண்டிருந்தான் சைக்கிள் கடையை நெருங்கியபோது நான் அவ்வழிப்போக்கனைத் தடுக்க வாயெடுத்தேன் அதற்குள், 'படீரெ'ன்று டயர் வெடித்தது.

சைக்கிளை விட்டிறங்கிய அவன், எதிரே 'சைக்கிள் ரிப்பேர்' கடை இருப்பதைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் அங்கு போனான். சிதம்பரத்துக்கு விடிகாலையிலேயே ஒரு 'கிராக்கி'. அதிகாலைகளில் சிதம்பரத்தின் 'சைக்கிள்ரிப்பேர்' கடைக்கு அதிக 'கிராக்கிகள்' வருவதன் ரகசியமும் எனக்குப் புரிந்தது. ஏமாற்றப்பட்டவனுக்கு உதவப் போன இடத்தில் அவனே ஏமாற்றக்காரன் என்று புரிந்ததும், மனச் சோர்வுடன் வீட்டுக்குத் திரும்பினேன். அந்த நூறு ரூபாவை மேஜைமேல் வைத்துவிட்டுக் 'காலண்டரை'க் கிழித்தேன். 'அக்டோபர் 2 மகாத்மா காந்தி பிறந்த தினம்' என்ற எழுத்துக்களில் என்பார்வை படர்கிறது.

கண்களை மூடி அப்பெருந்தகையைத் தியானிக்கிறேன்.

'மதிப்பிற்குரிய மகாத்மாஜி அவர்களே! உங்களுடைய நூற்றி ஆறாவது பிறந்தினம் இன்று பணக்காரனாலும் ஏழையானாலும் சத்தியத்தைக் கொலை செய்யும் போதுமட்டும் பேதமில்லாமல் செயற்படுகிறார்கள். ஒருவனை ஒருவன் ஏமாற்றுவதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறான். என்னை மாதிரி கோழைகளால் இந்த உலகைச் சீர்ப்படுத்த முடியாது. அதனால் உண்மையின் பிறப்பிடமே காந்திஜி! நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும்.

(யாவும் கற்பனை)

---

## குட்டிக் கதை

# ஒரு புதிய சமுதாயம்!

''ஒரு புதிய சமுதாயம் உருவாகிறது. இன்றையதைவிட விசாலமான, பெரிதான. மாறுபட்ட ஒன்றல்ல... ஒரு புதிய சமுதாயம்... இந்த சாதாரண விடயம் எங்கள் உணர்வுக்குத் தென்படவில்லையென்றால், நாளை நம்மை நாமே அழித்துக்கொள்ள நேரிடும்...''

''என்ன புத்தகம் மாஸ்ரர், அது...?''

சாவகச்சேரி நகராட்சிமன்ற நூலகத்திலிருந்து எடுத்து. வேரற்கேணி கலைமகள் படிப்பகத்திலிருந்து வாசிக்கிறேன். எட்வின் டொவ்லர் எழுதிய ஃபியூற்சர் சொக்... எதிர்கால அதிர்ச்சி...

நகைச்சுவையோடு பேசும் செல்லப்பா மாஸ்ரர், ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர். புத்தகம் அவருடையபொழுதுபோக்கு

எதிர்காலம் பற்றியதா...... நன்றாயிருக்கிறதே ... படியுங்கோ கேட்பம், என்றேன்.

அவர் தொடர்ந்தார்.

''ஆட்சியை, நிர்வாகத்தை உலுக்கும் புரட்சிகள்... இவைதான் இன்று முன்னேறியுள்ள தொழில்நுட்ப நாடுகளில் நிலவும் பிரச்னைகள்... நியூயோர்க், பேர்லின், டியூரின், டோக்கியோ ஆகிய நகரங்களில் பல்கலைக்கழக பேராசிரியர்களையும், கலாநிதிகளையும், மாணவர்கள் 'கைப்பற்றி' கல்வித் தொழிலகங்களை செயல்படாமல் தடுக்கிறார்கள். ஆட்சியைக் கவிழ்க்கிறார்கள்... நியூயோர்க், வாஷிங்டன், சிக்காக்கோ போன்ற நகரங்களில் மிகப் பழமையான சொத்துரிமைச் சட்டங்களை பகிரங்கமாக, பொலிசாரின் முன்னிலையிலேயே மீறப்படுகின்றன. வேலைநிறுத்தம், கலவரம், மின்னொளித்தடை இவற்றால் பெரும்பெரும் நகரங்கள் செலயற்றுப்போகின்றன. பாலியல் குற்றங்கள் பெருகுகின்றன. அகில நாடுகளின் அரசியல் தொடர்புகள் ஆட்டங்காண்கின்றன. பொருளியல் அறிஞர்களும், அரசியல் தலைவர்களும் அந்தரங்கமாகவே கவலைப்படுகிறார்கள். கம்யூனிச, முதலாளித்துவ வர்க்கங்கள் தம் கட்டுப்பாடுகள் குலைவதை உணர்கின்றன. இச்சமுதாயம் ஒரு புதுவித நோய்க்கு இரையாகும் சாயல்கள் தென்படுகின்றன. வழக்கமான அத்தியாவசியமான கடமைகளையே நடைமுறைப்படுத்த முடியாத நிலையிலுள்ள ஒரு சமுதாயமாக, வேதனையுறும் புரட்சிகரமான மாற்றங்களில் அகப்பட்டுத் தவிக்கும் சமுதாயமாக...''

''ஆனால்...''

நான் இடைமறித்தேன்.

படிப்பதை நிறுத்தி 'என்ன தம்பி சொல்லும் என்றார் மாஸ்டர்.

'ஆனால் இளைய சமுதாயம் இங்கே வேறுமாதிரியல்லவா செயல்படுகின்றது... தாமும் புரட்சிசெய்கிறோம் என்று சொல்லிக்கொண்டு தவறான வழியில் அல்லவோ போகிறார்கள்... இங்கே, இளைஞர்கள்.''

''எதைப்பற்றிச் சொல்லுகின்றீர்...?

''சமீபத்தில் இந்த சந்தியில் நடந்த பஸ் உடைப்பைப் பற்றிச்சொல்கின்றேன், மாஸ்டர்...''

''அப்படியா...? எப்போது? நான் கேள்விப்படவில்லையே, என்ன நடந்தது சொல்லும், என்றவன் புத்தகத்தை மூடி மேசையில் வைத்தார்.

சாவகச்சேரியில் ஒருகல்லூரியில் விளையாட்டுப்போட்டி நடந்தது விளையாட்டுக்கள் முடியஇரவுஏழுமணியாயிற்று. மாணவ, மாணவியர் பஸ் ஏறினார்கள். நல்ல நெருக்கம்... பஸ் வந்து இந்தப் புளியடியிலே நின்றது... பிள்ளைகள்... எல்லோரும் இறங்குமுன்வர் யாரோ மணியடிக்க, பஸ் புறப்பட்டது. அனேகமாக ஆண்கள் இறங்கிவிட பெண்கள் உள்ளேயிருந்து நெரிபட்டு இறங்க முயற்சிக்கையில் மணி அடிக்கப்பட்டது.

''இன்னும் இறங்கஇருக்கு'' பல குரல்கள்.

மீண்டும் மணி அடிக்சப்பட்டது.

பஸ் நின்றது.

கெதியாய் இறங்குங்கோ... என்று கண்டக்டர் சொல்லி வாய்மூடுமுன் மணி அடிக்கப் பட்டது.

பஸ் புறப்பட்டது.

மாணவியர் சிலர் இன்னும் இறங்கவில்லை.

வெளியே நின்ற மாணவர்னர், துடியாய்த்துடித்தனர்.

## எஸ். பி. கிருஷ்ணன்

நிற்பாட்டு பஸ்ஸை... என்று முழங்கினர்.

மீண்டும் மணி அடிக்கப்பட்டது.

பஸ்சின் முன்பக்கம் ஓடினான் ஒருவன். சாரதியைப்பார்த்து, 'அண்ணை இன்னும் இறங்க இருக்கு, பொறுங்கோ' என்றான்.

அதே வேளை மணி அடிக்கப் பட்டது.

பஸ் புறப்பட்டது.

அடி...

குத்து...

உடை...

(9-ம் பக்கம்பார்க்க)

# மக்கள் சீனுவின் வெளிநாட்டுக் கொள்கை!

**மக்கள் சீனுவின் வெளிநாட்டுக்கொள்கையைப் பற்றி கட்டுரையாளர் விளக்குகிறுர். இன்று சீன தேசிய தினத்தை யொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

மக்கள் சீனக்குடியரசு ஸ்தாபிக்கப்பட்டு இருபத்தொன்பது ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. சீனுவின் மதிப்பிற்குரிய தலைவர்களான மாஓ-சேதுங், சூ-என்-லாய் காலமானதைத் தொடர்ந்து சீனுவைப் பலரும் பலவாருக விமர்சித்துவருகின்றனர். இந்நிலையில் இக்கட்டுரையின் நோக்கம் அந்நாட்டின் வெளிவிவகாரக் கொள்கையைப் பற்றி ஒரு மதிப்பீடு செய்வதேயாகும்.

மக்கள் சீனத்தின் அரசியல் வரலாற்றை நிதானமாக-அவதானிப்பதன் மூலம், அதன் இன்றைய வெளிநாட்டுக் கொள்கையை தெளிவாக



உணர்ந்து கொள்ளமுடியும். சீனத்தின் மூன்றுலகக் கோட்பாட்டின் அடித்தளத்திலேயே அதன் வெளிவிவகாரக் கொள்கை அமைந்துள்ளது.

ஒருநீண்ட ஆய்வின் பின்னர் தலைவர் மா-ஓவினுல் முன்வைக்கப்பட்ட கோட்பாடே மூன்று உலகக் கோட்பாடாகும். ''பிரதான எதிரியைத் தனிமைப்படுத்தி, இடைநிலைச் சக்திகளுடன் ஐக்கியப்பட்டு, ஒரு நீண்ட பொதுப்போராட்டத்தின் மூலம் பொது எதிரியைத் தோற்கடிப்பது'' என்ற தலைவர் மா-ஓவின் மூல உபாயத்தின் அடிப்படையிலேயே இந்த மூன்று உலகக் கோட்பாடு அமைந்துள்ளது.

## மூன்றுலக நாடுகள்

மூன்றுலகக் கோட்பாட்டின் படி இரண்டு மேலாதிக்க வல்லரசுகளான சோவியத் யூனியன், அமெரிக்கா என்பன முதலாம் உலகமாகவும்; வளர்ச்சியடைந்த, கைத்தொழில் நாடுகளான ஐரோப்பிய நாடுகள், யப்பான், கனடா ஆகியன இரண்டாம் உலகமாகவும்; ஒடுக்கப்பட்ட ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் மூன்றும் உலகமாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

முதலாம் உலக நாடுகள் இரண்டிற்குமிடையே முரண்பாடு உண்டென்பதையும்; முதலாவது உலகத்திற்கும் இரண்டாம் உலகத்திற்குமிடையேயும், மூன்றுமுலகத்திற்குமிடையேயும்இரண்டாம் உலகத்திற்கும், மூன்றுமுலகத்திற்குமிடையேயும் முரண்பாடுகளும், பிரச்னைகளும் உண்டென்பதைச் சீனு ஏற்றுக்கொள்ளுகின்றது. ஆனுல் இரண்டாம், மூன்றும் உலக நாடுகளை இருமேலாதிக்க வல்லரசுகளும் சுரண்டுவதாலும், அச்சுறுத்துவதனுலும் பொது எதிரியாக விளங்குகின்றன.

## சர்வதேசக் கடமை

இன்று இரண்டு மேலாதிக்க வல்லரசுகளான முதலாம் உலக நாடுகள் அசுரவேகத்தில் ஆயுதப் போட்டா போட்டியில்முன்னிற்கின்றன. வெளிநாடுகளில்தமதுசந்தைகளையும் மூலவளங்களையும் பாதுகாப்பதே அவற்றின் இலக்காகும். இந்த இலக்கை எய்துவதற்கு இன்னொரு யுத்தம் முடுக்கிவிடப்படும். அந்த யுத்தம், அதிபயங்கரத்தன்மையுடைய மூன்றுமுலகயுத்தமாகும். ஆதலால் இன்றைய உலகம் இன்னொரு யுத்தத்தை எதிர் நோக்கிய வண்ணமிருக்கிறது. ஏகாதிபத்திய அமைப்பு இருக்கும்வரை உலகயுத்தமும், அதன் பயங்கரத்தன்மையும் தவிர்க்கப்படமுடியாதவை. உலக மக்கள் தமது எழுச்சிமிக்க விடுதலைப் போராட்டங்கள் மூலம் யுத்தமொன்று வெடிப்பதை தற்காலிகமாக தடுத்துவைக்கமட்டுமே முடியும். உலகை எதிர்நோக்கும் யுத்த ஆபத்தை மக்களுக்கு உணர்த்தி, வெடிக்கவிருக்கும் யுத்தத்தை தடுத்து வைப்பதனையே சீனு தனது சர்வதேசக் கடமையாகக் கருதி. அதற்கான பிரச்சாரத்திலும் முழுமூச்சாக ஈடுபட்டுச் செயலாற்றி வருகின்றது.

## பரந்த ஐக்கிய முன்னணி

இதனுல்தான் பொது எதிரிகளான இருமேலாதிக்க வல்


எஸ். தேவராசா
(சட்டத்தரணி)
(உபதலைவர், இலங்கை-சீன நட்புறவுச் சங்கம் யாழ். கிளை)


லரசுகளுக்கும் எதிராக உலகில் பரந்த ஐக்கிய முன்னணி ஒன்றை அமைப்பதையே அடிப்படையாகவைத்து, சீனு வெளிநாடுகளுடன் பஞ்சசீலக் கொள்கையின் அத்திவாரத்தில் உறவுகளை ஏற்படுத்தி-நட்புறவைப்பலப்படுத்தியும், பராமரித்தும் வருகின்றது.

ஒருநாடு இன்னெரு நாட்டுடன் உறவைக் கொண்டிருப்பதனுல் இருநாடுகளும் ஒன்று மற்றதன உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளை அங்கீகரிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. கடந்த காலத்தில் லெனின், ஸ்டாலின் தலைமையில் சோவியத் சோசலிசக் குடியரசினுல் பின்பற்றப்பட்ட வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படையிலேயே சீனுவின் இன்றைய வெளிநாட்டுக் கொள்கையும் அமைந்துள்ளது. லெனின் காலத்தில் கைச்சாத்திடப்பட்ட பிறெஸ்ட்- லிட்டோவ்ஸ்க் உடன்படிக்கையென்பது தேவையின் காரணமாகவே கைச்சாத்திடப்பட்டது. ரஷ்யப் புரட்சியை பாதுகாப்பதற்காவே அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. ட்ரொவ்ஸ்கியின் எதிர்ப்புக்கு மத்தியிலும் லெனின் விடாப்பிடியாக அந்த ஒப்பந்தத்தைச் செய்தார். பின்பு ஸ்டாலினும் பல உடன் படிக்கைகளைச் செய்ததும் ரஷ்யப் புரட்சியைப் பாதுகாப்பதற்கேயாகும்.



லெனின் ஒருமுறை முதலாம் உலகயுத்தத்தின் பின்னர் உலக சமாதானத்துக்காக அமைக்கப்பட்ட சர்வதேச சங்கத்தைக் ''கள்வர்குகை'' என வர்ணித்தார். ஆனுல் உலகை ஒரு யுத்தம் பயமுறுத்திக் கொண்டிருந்த காரணத்தால் 1934 ம் ஆண்டின் இறுதியில் சர்வதேச சங்கத்தில் சோவியத்யூனின் சேர்ந்து கொண்டது.

பிரான்ஸ், செக்கோ சிலேவாக்கிய, மொங்கோலியா, சீனு, யப்பான் ஆகிய நாடுகளுடனும் சோவியத் யூனியன் அன்றைய காலகட்டத்தில் அதிகரித்துக் கொண்டிருந்த யுத்த அபாயத்தைக் கருத்திற் கொண்டே இதுபோன்ற ஒப்பந்தங்களைச் செய்தது.

## சீனு-யப்பான் ஒப்பந்தம்

சீனு இரண்டாவது உலக நாடான யப்பானுடன் இன்று செய்துள்ள ஒப்பந்தம் இத்தகைய இலக்கை எய்துவதற்காகவேயாகும். சீன தேசத்தை விடுதலை செய்வதற்காக, அன்றைய பொது எதிரியான யப்பானுக்கு எதிராக பரந்த ஐக்கிய முன்னணியில் ஷியாங்கைசேக்குடன் தலைவர் மாஓ செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இன்றைய பொது எதிரிக்கு எதிராக சீன-யப்பான் ஒப்பந்தமும் அமைந்துள்ளது.

சீனுவின் வெளிவிகாரக் கொள்கை தலைவர் மாஓவினுலேயே நேரடியாக முன் வைக்கப்பட்டு நடைமுறைப்படுத்துப் வெளிவிவகாரக் கொள்கை தன்னையும், தனது மக்களையும் மட்டுமன்றி உலகத் தொழிலாளி வர்க்கத்தினதும், அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களினதும், தேசங்களினதும் பொதுநலனையும் விமோசனத்தையும் அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டதென்பது உண்மையாகும்.

---

## வாரியார் சிந்திய முத்துக்கள்

### சக்தி

சிவம் ஞானத்தில் இருப்பது. சக்திதான் இயக்குவிப்பது, சக்தி இருந்தால் செய் அல்லது சிவனே என்று இரு' என்று இதனைத்தான் குறிப்பிட்டார்கள். சிவா சிவா என்று நான் பேசாமல் இருக்கிறேன் என்னை விடமாட்டேன் என்கிறுர்களே! இதுவும் ச்க்தியின் பெருமையை குறிக்க எழுந்ததே. எனவே சக்திதான் உயர்ந்தது.

### அட்டமத்துச் சனி

குடும்பத்தில் மூத்தபிள்ளை தன்ருகப்படித்து அடுத்து வரும் மற்றப்பிள்ளைகளுக்கு வழிகாட்டியாக அமையாமல்-குடித்து வெறித்து கெட்ட பழக்கங்களையெல்லாம் பழகித்திரிந்தால் அந்தப்பிள்ளைதான் அந்தக் குடும்பத்துக்கு அட்டமத்துச்சனி.

அக்கம் பக்கத்தில் இருப்போருடன் நாம் ஒற்றுமையாக இருக்கவேண்டும். அப்படி இல்லாவிடில் அவர்கள் எம்மைச்சந்திசிரிக்கவைத்துவிடுவார்கள். ஏன் என்னையே உதாரணத்துக்குச் சொல்கிறேன். பக்கத்து வீட்டுக்காரன் என்னுடன் எதிர்ப்பாளனுக இருந்தால் நாளைக்கு எங்கள் வீட்டில் இருப்பவர்களுக்கு தெரியாமல் இரண்டு சாராயப் போத்தல்களைப் போட்டுவிட்டு நாளைக்கு பேப்பரில் வாரியார் சாராயம் பாவிக்கிறுர் என்று போட்டுவிட்டால் நாளைக்கு உலகம் நம்பத்தான்செய்யும். எனவே அக்கம்பக்கத்தில் உள்ளோர் நம்முடன் ஒற்றுமையாக இல்லாவிட்டால் அதுவும் அட்டமத்துச் சனிதான்.

குடும்பத்தலைவனுக்கு ஒரு நல்ல மனைவிகிடைக்காவிட்டாலும் அதுவும் அட்டமத்துச்சனிதான், எத்தனையோ பேர் பணம்-பொருள் என்று பெரிய லட்சாதிபதிகளாக இருக்கிருர்கள். ஆனுல் வீட்டிலோ மனைவியால் நிம்மதி இல்லை. இதெல்லாம் ஆண்டவன் படைப்பு. நம் ஊரிலே என்ருல் அம்மா ஐயாவுக்கு அர்ச்சனை செய்கிருர் என்று வேலைக்காரன் சொல்வான். எனவே குடும்பத்தில் நல்லமனைவி கிடைக்காவிட்டால் அந்த மனைவிதான் குடும்பத்துக்கு அட்டமத்துச்சனி,

### பணக்காரன்-சிறைக்கைதி

வாழ்க்கையில் சிறைக்கைதிக்கு இருக்கக்கூடிய நிம்மதி கூட பணக்காரனுக்குஇல்லை.ஆனுல்ஒரேஒரு ஒற்றுமை. சிறைக்கைதிகளை காவலாளி பூட்டிவிட்டுச் செல்கிருன். ஆனுல் பணக்காரனே தானே தனது கதவுகளைப் பூட்டிவிட்டுப் படுக்கிருன். கைதிக்கு நிம்மதியான நித்திரை பணக்காரனுக்கு நிம்மதியற்ற நித்திரை.

-கண. ஜீவகாருண்யம்

---

இலங்கை-இந்திய தமிழர்களுக்கிடையில் கலை கலாசார உறவுகள் ஏன் ஒரு வழிப்பாதையாக இருக்கவேண்டுமென்று எழுத்தாளர் டொமினிக் ஜீவா கேட்டார்.

இளமைத் துடிப்போடு காணப்படும் ஜீவாவுக்கு இப்பொழுது 50 வயதாகின்றது. இலங்கையில் தமிழ் நூலுக்கு முதலாவது சாகித்தியமண்டலப் பரிசு பெற்றவர் அவர்.

'மல்லிகை' என்ற 14 வருடங்களாக நடைபெறும் மாதாந்த சஞ்சிகையின் ஆசிரியரர்கவும் பிரசுரகர்த்தாவாகவும் அவர் விளங்குகின்ருர்.

இந்தியாவில் வெளியாகும் தமிழ் சஞ்சிகைகளும், தமிழ் செய்திப் பத்திரிகைகளும் இலங்கைக்கு அனுப்பப்படும் அதேசமயம் இலங்கையில் வெளியிடப்படும் தமிழ்ச்சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் இந்தியாவுக்கு அனுப்பப்பட முடியாமலிருப்பதை அவர் சுட்டிக்காட்டினுர். தமிழ் தேசிய மொழிகளில் ஒன்ருக இருப்பதால் இலங்கையிலிருந்தோ மலேஷியாவிலிருந்தோ வர்த்தகரீதியில் பிரசுரங்களைத் தருவிப்பதை இந்திய மத்திய அரசும் தமிழ் நாடு மாநில அரசும் தடை செய்தூள்ளன.

ஆனுல் ஜீவா மிகத் தெளிவாகக் கூறுகிருர், 'இந்த விஷயத்தில் நாங்கள் அல்ல நஷ்டமடைபவர்கள். இந்தியாவில் எமது சஞ்சிகைகளை விற்கமுடியாமலிருக்கலாம். ஆனுல் வெளிநாடுகளிலுள்ள தமிழர்கள் என்ன செய்கிருர்கள் என்பதைக் கூட அறிய முடியாத கிணற்றுத்தவளைகளாகவே இந்தியத் தமிழர்கள் இருந்துவிடுவார்கள். இதே சமயம் இந்தியாவி இலக்கியத்துறையில் என்




## தமிழ்நாட்டுடனுன

# கலை, கலாசார பரிவர்த்தனை ஒருவழிப் பாதைதானு?

மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா அண்மையில் தமிழ் நாட்டுக்குச் சென்றிருந்தார் அல்லவா; அப்பொழுது தமிழ்நாட்டில் பல தமிழ் எழுத்தாளர்களைச் சந்திக்க வாய்ப்பு ஏற்பட்டது மட்டுமன்றி, தமிழ் நாட்டிலுள்ள பிரபல பத்திரிகைகள் பலவும் அவரது பேட்டியை வெளியிட்டிருந்தன. அவ்வாறு ஆகஸ்ட் 28-ம் திகதி 'இந்தியன் எக்ஸ் பிரஸ்' பத்திரிகையில் வெளியான ஜீவாவின் பேட்டியை இங்கு தருகின்றோம். திரு. என். வி. சங்கரன் என்பவர் இப்பேட்டிக் கட்டுரையை எழுதியிருந்தார். (ஆ-ர்)



நடக்கிறது என்பதை அறிந்துகொள்ளக்கூடிய நிலையிலும் எமது வாழ்வை சரியான வழியில் சீர் அமைத்துக் கொள்ளும் நிலையிலும் நாம் இருக்கின்றோம்' என்கிறார் ஜீவா.

எளிமையாக ஆனல் பெருமையோடு சிகை அலங்கரிப்பாளராக வாழ்க்கையை ஆரம்பித்தவரான ஜீவா. பின்னர் முற்போக்கு இலக்கியத்துக்காக உழைப்பதையே தமது பணியாக ஏற்றுக்கொண்டுவிட்டார். அவர் ஒரு நம்பிக்கையுள்ள இடதுசாரி.

'உங்கள் நாட்டிலுள்ள பெரிய, சிறிய, வளர்கின்ற

## இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு மல்லிகை ஆசிரியர் அளித்த பேட்டி

எழுத்தாளர் அனைவரையும் நாம் சவனித்துக்கொண்டுதான் வருகின்றோம். நீங்கள் உயர்த்திவைத்துக்கொண்டுள்ள சில எழுத்தாளர்களை நாங்கள் ஒப்புக்கொள்வதில்லை. அதேசமயம் நீங்கள் அங்கீகரிக்க மறுக்கும் திறமையுள்ள சில இளம் எழுத்தாளர்களை நாம் பாராட்டி வரவேற்கின்றோம்' என்றார் ஜீவா.

இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களுக்குள்ள பிரச்னைகள் தாம் என்ன?

ஐம்பதுகளில் எமக்கென்று சஞ்சிகைகள் இல்லாதிருந்தது ஒரு பிரச்னைதான். ஆக்க இலக்கியங்களை வெளியீட்டு வந்த தினசரிப்பத்திரிகைகளில் வாரமலர்களும் உங்கள் நாட்டு பிரபல பத்திரிகைகளையே முன்மாதிரியாகப் பின்பற்றிவந்தன. பேராசிரியர் கைலாசபதி தினகரன் பத்திரிகையில் ஆசிரியராகப் பொறுப்பேற்றதன் பின்னர் தான் ஒரு மாற்றம் ஏற்பட்டது. உங்கள் பிரபல சஞ்சிகைகள் காட்டியது போல் சமூகம் இருக்கவில்லையென்பதை எமது வாசகர்களும் மெதுவாக உணர ஆரம்பித்தார்கள். எமது நாட்டில் இலக்கியம் சமுதாயத்திலிருந்து ஒதுங்கிவிடுவதில்லை. அதனுல் சமூக மாற்றங்கள் இலக்கியத்திலும் பிரதிபலித்தன என்றார் ஜீவா.

தற்காலத்தில் மிதமிஞ்சிய அச்சகச் செலவுகள் தான் எழுத்தாளர்களை எதிர்நோக்கும் பிரச்னைகள் ஆக்க எழுத்தாளர்களால் சஞ்சிகைகளை நடத்தக்கூடிய விதத்தில் ஒருமுகப்பட்டுச் செயல்பட முடியாது என்ற கொள்கையை 14 ஆண்டுகளுக்கு முன்னர் நான் உடைத்தெறிந்தேன். ஆனல் எமது பத்திரிகை விற்பனைச் சந்தை மிகவும் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாலும் அச்சுக்கூலிகள் அதிகரித்திருப்பது ஒரு பிரச்னையாக எழுந்துள்ளது.

பெரும்பாலான எமது முற்போக்கு எழுத்தாளர்கள் வர்த்தக ரீதியிலான பிரசுர கர்த்தர்களிடம் போவதில்லை. தாங்கள் ஆக்கங்களைத் தாங்களே வெளியிடுகின்றார்கள்.

''தமிழ்நாட்டின் ஜனரஞ்சக பத்திரிகைகள் உங்கள் நாட்டில் பாதகமான தலைமையை ஏற்படுத்தியிருப்பதாகக் கருதுகிறீர்களா?''

',ஒருவகையில் வர்த்தகரீதியிலும் கலாசார ரீதியிலும்

(9ம் பக்கம் பார்க்க)

## உங்கள் கேள்விகளும் ஆவிகளின் பதிலும்

சிறிஸ்கந்தராஜா
முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனக்கு வெளிநாட்டில் வேலை கிடைத்து (ஈரான்) செல்கிறேன். இதனுல் நன்மையுண்டா?

நிச்சயம் நன்மையுண்டு. எதிர்காலம் நன்ருக இருக்கும்.

நான் விரும்பியிருக்கும் பெண் கிடைப்பாளா?

கிடைப்பாள்.

எனது அண்ணன் வெளிநாட்டில் போய் மேல் படிப்புப் படிப்பாரா?

மேற்படிப்பு உண்டு. ஆனல் வெளிநாட்டில் அல்ல.

எனது சகோதரியின் திருமணம் எப்போது நடக்கும்?

அடுத்த ஆண்டு.

கடன் தொந்தரவு எப்போது சீரடையும்?

உங்கள் மூலமாகவே விரைவில் சீரடையும்.

செல்வி...?
(பெயர் குறிப்பிட விரும்பாத வாசகி) பீச்ரோட்,
பருத்தித்துறை.

என் திருமணம் எப்போது நடக்கும்?

இரண்டு வருடங்களில்.

என் வருங்காலக் கணவர் என்ன தொழில் செய்வார்?

கேட்டு எழுதுபவர்:

**வி. ரவிச்சந்திரன்**

எந்த மதத்தவர்?

அரசுப்பணி செய்வார். உங்கள் மதத்தைச் சேர்ந்தவரே.


என் பிற்கால வாழ்வு நிம்மதியாக இருக்குமா?

அமைதியும் நிம்மதியும் கூடிய வாழ்வு அமையும்.

என் வாழ்க்கை மன்றத்திற்கு யார் உதவி தேவைப்படும்?

கணவன் உதவியால்தான் நடைபெறும்.

(9ம் பக்கம் பார்க்க)

CEYLINCO ADS

த பினன்ஸ் கொம்பனி லிமிட்டட்
3வது மாடி, செலின்கோ மாளிகை, கொழும்பு 1. தொலைபேசி 23861-2

கிளை அலுவலகங்கள்:-
255, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
191, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
185/2, புத்தளம் வீதி, குருநாகல்.
எல். ஜீ. ஜே. கட்டிடம், 15/2-1 கடற்கரை வீதி, மாத்தறை.
80, மட்டக்களப்பு வீதி, பொலநறுவை.

ள் கண்ணியமிக்க வாடிக்கைக் காரருக்கு
தமான சேவை–

இப்பொழுது த பினன்ஸ் ஸ்தாபனத்தார் தங்கள் கண்ணியமிக்க வாடிக்கைகாரருக்கு உதவுமுகமாக ஒரு புதிய கச்சிதமான சேவையைத்தொடங்க முடிவு செய்திருக்கிருர்கள்.

, கைத்தொழிலுக்கு வேண்டிய உபகரணங்களையும், உதிரிப்பாகங்களையும்,மற்றும் வீட்டிற்கும் உங்களுக்கும் தேவையான நீண்டகால பாவனைக்கேற்ற ம் வேண்டிய பொருட்கள் தற்பொழுது உங்கள் கைக்கு எட்டுகின்றது. பொருட்களையும் மாதாமாதம் பணம் கட்டும் முறையில் பெற்றுக் கொள்ளும் வசதியைக் கொடுக்க முன் வருகின்ருர்கள்.

விபரங்களுக்கு எங்களைக் கண்டு கொள்ளுங்கள்:-

## உங்களுக்குத் தெரியுமா?

ஒரு நிமிடத்தில் உலகிலுள்ள சமுத்திரங்களிலிருந்து வெளியேறும் நீரின் நிறை 128 லட்சம் தொன்.

ஆரோக்கியமாக வாழ்ந்த ஒரு 40 வயது மனிதனின் இதயம் அவனின் வாழ்நாளில் 125கோடிமுறை துடித்திருக்கும்.

புவியின் சுழற்சி காரணமாக புவியில் இருக்கும் நாம் விண்வெளி சார்பாக ஒரு நிமிடத்திற்கு 66,000 மைல்கள் பிரயாணம் செய்கிறோம்.

9ன் மடங்கான எந்த வொரு எண்ணிலும் உள்ள ஒவ்வொரு இலக்கத்தையும் தனித் தனியே கூட்டி பெறும் இறுதி இலக்கமும் 9 ஆகும்.

உதாரணமாக

18 (1+8)=9
144 (1+4+4)=9
1899 (1+8+9+9)
=27 (2+7)—9.

ஒரு சாதாரண திரைப்படத்திலுள்ள படச்சுருளின் மொத்த நீளம் ஏறத்தாழ 3 1/2 மைல்.

எஸ். ரி. ராஜா
ஜி. சி. ஈ. உயர்தரம்
கிறிஸ்தவக்கல்லூரி,
கோப்பாய்

# அன்புத் தோழன்

-சி. வி. குணசேகரம்-

(6)

கொலு மண்டப வாசலுக்கு சிறிது தூரத்தில் விஜயபுரி ஆஸ்தான குருபால தேவர் நின்று கொண்டிருந்தார். அவரது சாந்தமான விழிகளிரண்டும் மருண்டிருந்தன. முகம் பேயடித்தது போல் திகிலடைந்திருந்தது.

''குருதேவா, சற்றுப் பொறுத்துக் கொள்ளுங்கள்... அரண்மனை வாசலில்...'என்று விக்கிரமன் கூறிக் கொண்டிருக்கும் போதே இடைமறித்துப் பேசினார் பாலதேவர்'' எல்லாம் எனக்குத் தெரியும். நீ அங்கே போகவேண்டாம். இங்கே வா''

பாலதேவர் விஜயபுரி ஆஸ்தானகுரு. விக்கிரமனுக்கு சகல கலைகளையும் கற்பித்த மாமேதை. சாந்தமாகவும் அமைதியாகவும் பேசும் அவர் அப்படி முழங்கியதன் காரணம் விக்கிரமனுக்கு புரியவில்லை. இருப்பினும் காரணமின்றி அவர் அழைக்கமாட்டார், என்று சிந்தித்தவண்ணம் பாலதேவருக்கு அருகே வந்தான்.

''வாளை உறையிலிடு'' என்று கட்டளையிட்டார் பாலதேவர்.

''குருதேவா...'' என்று பலமாக அலறினான் விக்கிரமன்.

''விக்கிரமா..., பாலதேவரைப்பற்றி முற்றும் அறிந்த நீயா இப்படி அவசரப்படுகிறாய்.''

சிறிது தூரம் நடந்துசென்ற அவர் ஓரிடத்தில் இருந்தார். பின் சுற்றிவர ஒருமுறை பார்த்துவிட்டு அவ்விடத்தில் நிலத்திலிருந்த சருகுகளை அகற்றிவிட்டு 'விக்கிரமா இக் கல்லை நகர்த்து' என்றார்.

விக்கிரமன் பாலதேவர் காட்டிய கல்லை நகர்த்தினான். அங்கே நிலத்துக்கடியில்பாதை ஒன்று தென்பட்டது, மெதுவாகக் கீழே இறங்கிய பாலதேவர் தமது மடியில் இருந்த கல்லொன்றை எடுத்து சுவரில் உராசினார். உடனே அது தீப்பற்றிக்கொண்டது. மறுகையில் தயாராக வைத்திருந்த தீவெட்டியை அத்தீயில் கொழுத்தினார் பாலதேவர்.

தீவெட்டி ஒளியைக் கக்கியது. அவ்வொளியில் கீழ் நோக்கிச் செல்லும் படிக்கட்டுகள் தெரிந்தன.

'விக்கிரமா, கீழே இறங்கி கல்லை நகர்த்தி வாசலை அடைத்துவிடு என்றார்.

பாலதேவர் விக்கிரமன் கீழே இறங்கி கல்லை நகர்த்தி அடைத்தான். பாலதேவர் ஆங்காங்கே சுவரில் பொருத்தப்பட்டிருந்த தீவெட்டிகளைக் கொழுத்தியவண்ணம் படிகளில் இறங்கினார். விக்கிரமனும் ஆச்சரியத்துடன் அவற்றைப் பார்த்தபடி கீழே இறங்கினான்.

இருவரும் விலாசமான ஒரு மண்டபத்திற்கு வந்தனர்.

இன்னும் பலம் பெறுவதற்காக பெரிய யாகம் ஒன்றைச் செய்ய நினைத்துள்ளான். அதற்கு நூறு கன்னிப் பெண்களையும், அரசமரபில் இரட்டைக் குழந்தைகளாகப்பிறந்த இருவரையும் பலியிடச் சொல்லி அவனது இஷ்ட தெய்வம் கட்டளையிட்டுள்ளது. அதற்காகவே பவளவல்லியைக் கடத்திச் சென்றுள்ளான். இன்று வந்தது உன்னைக் கடத்திச் செல்லவே'' என்றார்.

விக்கிரமன் அதிர்ந்து போனான். அவனால் பாலதேவர் சொன்னதை நம்ப முடியவில்லை.

''குருதேவா நல்ல சந்தர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர்கள். நீங்கள் செய்த உதவியை மறக்கமாட்டேன்'' என்று நாத்தழுதழுக்கக் கூறினான் விக்கிரமன்.

''விக்கிரமா, கொள்ளிக்காடன் பவளவல்லியை மட்டும் கவர்ந்து செல்லவில்லை. மணிபல்லவம், மகதம்,பவளபுரி, இரத்தினபுரி, போன்ற பலம்மிக்க நாடுகளின் இளவரசிகளையெல்லாம் கவர்ந்து கொத்திமலையில் சிறைவைத்துள்ளான். பலம்மிக்க இந்நாடுகளே கொள்ளிக்காடனை அழிக்கவழி தெரியாது தடுமாறுகின்றன. இந்நிலையில் நீ அவனோடு போராடுவது முடியாத காரியம். அதனால் தான் உன்னை இங்கு அழைத்து வந்தேன்'' என்றார் பாலதேவர்.

''அப்படியானால் அவனை அழிக்க முடியாதா...'' என்று கேட்டான் விக்கிரமன்.

சிறிது நேரம் யோசித்த பாலதேவர் 'முடியாது' என்றார்.

(அடுத்த எண்ணத்தில்)

## மூளைக்கு வேலை

(1) ஓர்எண்ணை 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 இவைகளால் தனித்தனி பிரிக்கும்போது 1 மிகுதியாக வரும். ஆனால் 11 ஆல் வகுக்கும்போது மிகுதி வராது. அவ் எண் யாது?

ஏ. செல்வராணி
இராமநாதன் கல்லூரி
சுன்னாகம்.

(2) சதத்திற்கு 20 நெல்லிக்காயும், சதத்திற்கு 1 வெண்டிக்காயும், 5 சதத்திற்கு 1 மாங்காயும் விலைப்பட்டன. ஒரு ரூபாவுக்கு எவ்வாறு 100 காய்கள் வாங்குவீர்?

ஏ. ஜெயராசா
இந்துக் கல்லூரி
கொக்குவில்.

(3) ஒருவன் குறிப்பிட்டளவு பூவை கோவிலுக்குக் கொண்டு சென்றான். சுவாமிக்கு சாத்துவதற்கு முதல் அவைகளை கோவிற்குளத்திலே கழுவினான். அவை அப்போது 10 மடங்காயின. ஒருதொகை பூவை சுவாமிக்குச் சாத்தினான். மிகுதியை இரண்டாவது கோவிலிற்கு எடுத்துச் சென்று அங்கும் முன்போலவே குளத்தில் கழுவும் போது கொண்டு சென்றதைப் போல இரண்டு மடங்காயின. முன் குறிப்பிட்ட அதே தொகையை அச் சுவாமிக்குச் சாத்திவிட்டு மிகுதியை மூன்றாவது கோவிலிற்கு எடுததுச் சென்றான். அங்கும் முன்போலவே அவற்றைக் கழுவ இரட்டிப்பாகின. அவை முழுவதையும் சுவாமிக்குச் சாத்தினான் மிகுதி இல்லை. இதில் மூன்று சுவாமிகளுக்கும் சாத்திய பூக்கள் சம எண்ணிக்கையே. அவன் கொண்டு சென்ற பூக்கள் எத்தனை? சுவாமிக்குச் சாத்தியபூக்கள் எத்தனை?

ஏ. குலேந்திரராசா
இந்துக் கல்லூரி
கொக்குவில்.

(விடைகள் எண்ணத்தின் பிறிதொரு கலத்தில்)

## அறிவைப்பற்றி அறிஞர்கள்

நாம் கற்றுக்கொடுக்க வேண்டியது. அறிவையன்று; அறிவையறியும் அறிவையே!

—'ஆர்னல்ட்'

அறிவு, நம்மை உயர்ந்த இடத்திற்கு ஏற்றுவதற்காக அமைக்கப்பெற்ற வன்மையான சிறகு. —'ஷேக்ஸ்பியர்'

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப் பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

—'திருவள்ளுவர்'

அறிவே ஆனந்தம்; அறிவே அணிகலன்; அறிவே சக்தி.
—'பேகன்'

சொல் மிக அருகிய இடம்; அறிவு பெருகிய இடம்.
—'சோபாக்ளிஸ்'

செல்வி ஜஹறுல் ஹாஜி
அபூஸாலிஹ்
யாழ். இந்து மகளிர்
கல்லூரி.

## விறுவிறுப்பு குறைந்துவிட்டது

'மாணவர் எண்ணம்' ஆரம்பத்தில் இருந்ததை விட இப்போது விறுவிறுப்பு குறைந்துவிட்டது. விரைவில் எண்ணம் புதுப்பொலிவுடன் திகழவேண்டும் என விரும்புகிறேன்.

ஏ. பிரேமளா
சி. சி. ரி. எம். பாடசாலை
கொக்குவில்.

[மாணவர்களே! இது உங்கள் எண்ணம். எனவே அதற்கு விறுவிறுப்பூட்டுவதும் உங்கள் கையிலேயே தாங்கியுள்ளது.]

# மாணவர் எண்ணம்

வாளை உறையுள் செருகிய விக்கிரமன் பாலதேவரது உதடுகளையே பார்த்த வண்ணம் நின்றான்.

''விக்கிரமா இதல்ல கொள்ளிக்காடனை எதிர்க்கும் சமயம், என்பின்னால் வா; யாவும் கூறுகிறேன்' என்று கூறிவிட்டு நடந்தார் பாலதேவர். அவரைப்பின் தொடர்ந்தான் விக்கிரமன்.

அரண்மனையின் பின்புற வாசல் வழியாக வீதிக்கு வந்த இருவரும் அரண்மனையின்பிற்பக்கபெருவீதிவழியாக மேற்குத்திசையை நோக்கி நடந்தனர்.

அரண்மனையில் போர்வீரர்களது மரண ஓலம் பலமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. விக்கிரமன் துயரோடு பாலதேவரை பின்தொடர்ந்து சென்று கொண்டிருந்தான்.

சிறிது தூரத்தில் ஒரு வீரன் குதிரையில் வந்து கொண்டிருந்தான். அதைக் கண்ட பாலதேவர் 'விக்கிரமா மறைந்து கொள்' என்றார்.

விக்கிரமன் பாதை ஓரத்தில் நின்ற ஒரு மரத்தோடு மறைந்துகொண்டான்.

வீதியில் வந்த வீரனை மறித்தார் பாலதேவர். 'வீரா என்னிடம் குதிரையைத் தந்துவிட்டு அரண்மனைக்குச் செல். ஆனால் என்னிடம் குதிரையைக்கொடுத்ததாக யாரிடமும் சொல்லாதே' என்றார்.

வீரன் பாலதேவரிடம் குதிரையைக் கொடுத்துவிட்டு அரண்மனையை நோக்கிச் சென்றான். பாலதேவரும் விக்கிரமனும் குதிரையில் புறப்பட்டனர்.

பெருவீதியால் சென்ற பாலதேவர், ஓர் ஒற்றையடிப் பாதையூடாக குதிரையைத் திருப்பினார். மரங்கள் அடர்ந்த பாதையால் விரைந்து சென்று ஒரு பெரிய பாதையின் அருகே குதிரையை நிறுத்திவிட்டு கீழே இறங்கினார்.

குறைந்தது நூறு போர்வீரர்கள் தங்கக்கூடிய வசதிகள் அங்கே இருந்தன.

'விக்கிரமா அப்படி உட்கார்' என்று கல்லில் செதுக்கிய ஆசனமொன்றைச் சுட்டிக்காட்டினார் பாலதேவர்.

விக்கிரமன் அவர் சுட்டிக் காட்டிய ஆசனத்தில் அமர்ந்தான். உள்ளே சென்ற பாலதேவர் சில நிமிடங்களில் இரண்டு கிண்ணங்களில் பழரசம் கொண்டுவந்து ஒன்றை விக்கிரமனிடம் கொடுத்துவிட்டு மற்றதைத் தான் பருகினார்.

விக்கிரமனுக்கு நடப்பதெல்லாம் கனவுபோலிருந்தது. யோசித்தபடி பழரசத்தை அருந்தினான்.

சிறிது யோசித்த பாலதேவர் பேசத்தொடங்கினார், "விக்கிரமா கொள்ளிக்காடன் மகதசாம்ராஜ்யத்தைச் சேர்ந்த கொத்திமலையில் வசிக்கிறான். சுமார் ஐம்பது ஆண்டுகள் கடுந்தவஞ்செய்து அரிய பல வரங்களைப் பெற்றுள்ளான். அவனை அழிக்க யாராலும் முடியாது. அவன் நினைத்ததும் பல உருவங்களை எடுப்பான். ஆயிரம் மைல்களைக் கண் இமைப்பதற்குள் கடந்து விடுவான். அவன்

## உங்கள் வாதத்திற்கு

மாணவ மணிகளே! இம்முறை உங்கள் வாதத்திற்கு ''மாணவர்களும் அரசியலும்'' என்னும் பொருளைத் தந்துள்ளோம், எங்கே உங்கள் எண்ணத்திற்கு வாதப்பிரதிவாதங்களை சமர்ப்பித்துஜமாய்த்து விடுங்களேன்.

மாணவர்களுக்கு அரசியல் வேண்டாத ஒன்று என்கின்றனர் ஒருசிலர். மாணவர்கள் அரசியலையும் அறிந்திருக்க வேண்டும் என்கின்றனர் வேறு சிலர். இதுபற்றிய உங்களது எண்ணம்தான் என்னவோ!

...கண்டோஸ்

## மாணவச் சிரிப்பு

ஆசிரியர்: இலங்கையின் கனிப் பொருட்கள் எவை?
மாணவன்: மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம், அன்னாசிப்பழம்.
ஆசிரியர்; ! ! !...

என். கே. துரைசிங்கம்
யாழ். மத்தியகல்லூரி.

## மூளைக்குவேலை... விடைகள்

(1) 25201.
(2) 80 நெல்லிக்காய் 04 சதம். 19 மாங்காய் 95 சதம். 1 வெண்டிக்காய் 01 சதம்.
(3) கொண்டு சென்ற பூக்கள்-111. சுவாமிக்கு சாத்திய பூக்கள்-1000.
கடந்த வார கணக்கின் விடை - 119 நிமிடங்கள்.
அரைவாசி குளம் 119 நிமிடங்களில் நிரம்புமாயின், 120 நிமிடத்தில் பூக்கள் இரட்டிப்பாகி குளம் முழுவதையும் நிரப்பும்.

## தொலைபேசிமூலம் இருதய சிகிச்சை!

தொலைபேசி மூலம் ஒரு நோயாளியின் இருதய இயக்கம் பற்றிய விவரங்களை அனுசல்செய்யும் புதிய சிகிச்சை முறையொன்றினை சோவியத் மருத்துவவியலாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

இம்முறை பிரயோகம்மூலம் படுக்கையிலுள்ள ஒரு நோயாளியின் இருதய நாடித்துடிப்பு பற்றிய விவரங்களை சப்த சமிக்ஞைகள்மூலம் டாக்டரின் அறைக்கு தொலைபேசிவாயிலாக அனுப்பிவிடமுடியும்.

இருதய நோயாளிகளைப் பரிசோதிப்பதில் நேரம் விரயமாகுவதைத் தவிர்க்க இந்தத் தொலைபேசிமுறைஉதவுகிறத.

தொலைவிலுள்ள ஒரு இருதய நோயாளியினை அம்புலன்ஸ் வண்டியில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரும் பொழுதே அம்புலன்ஸ் வண்டியிலிருந்து தொலைபேசி வாயிலாக ஆஸ்பத்திரியிலுள்ள டாக்டருக்கு நோயாளியின் இருதயநிலைபற்றி நிமிடத்துக்கு நிமிடம் அறிவிக்கவும் இப்புதிய முறை உதவுகிறது.

# தேவரின் இறுதி ஊர்வலத்தில் திரையுலகப் பிரமுகர்கள்

## எம். ஜி. ஆர். மூன்று மைல் தூரம் நடந்து வந்தார்

நமது நிருபர் வி. ரவிச்சந்திரன்

பட அதிபர் சின்னப்ப தேவரின் இறுதி ஊர்வலத்தில் தமிழக முதல் அமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் உட்பட திரையுலகப் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர். சுமார் மூன்று மைல்தூரம் அவர்கள் கொளுத்தும் வெய்யிலில் நடந்து சென்றனர்.

தேவரின் உடல் தகனம் செய்யப்படவில்லை. உட்கார்ந்த நிலையில் அடக்கம் செய்யப்பட்டது.

சிறந்த முருகபக்தரும் வெற்றிப்படத் தயாரிப்பாளருமான சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர் கடந்த 8-9-78 வெள்ளிக்கிழமையன்று கோயம்புத்தூரில் மாரடைப்பால் மரணமடைந்தார்.

63 வயதான சின்னப்ப தேவர் பக்திப்படங்களை எடுப்பதிலும், காட்டு மிருகங்களை வைத்து படம் தயாரிப்பதிலும் வல்லவர். அவர் கடைசியாக ஒரு ஆட்டை வைத்து தமிழில் தயாரித்து வெளியிட்ட 'ஆட்டுக்கார அலமேலு' படம் 25 வாரங்களுக்குமேல் தமிழகத்தில் ஓடியது

சின்னப்பதேவர் 'கொண்டாராமுலு' என்ற தெலுங்குப் படத்தை தயாரித்து வந்தார். இதில் முரளி மோகன் ஸ்ரீபிரியா ஜோடியாக நடிக்கிறார்கள். இந்தப் படத்திற்கான வெளிப்புறப் படப்பிடிப்பு ஊட்டியில் நடந்தது. சின்னப்ப தேவரும் அங்கு சென்றிருந்தார்.

7-9-78 வியாழக்கிழமை மாலை 4-30 மணிக்கு அவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டது. உடனே அவரை காரில் கோயம்புத்தூருக்கு அனுப்பினார். அவருடன் அவரது மருமகனும் சினிமா டைரக்டருமான தியாகராஜன்- கதை வசனகர்த்தா தூயவன் ஆகியோர் உடன் வந்தனர்,

காரில் வரும்போது அடுத்துத் தயாரிக்க இருக்கும் ''தாய் இல்லாமல் நான் இல்லை'' என்ற படத்திற்கான வசனங்களை அவர் படித்துக் கொண்டிருந்தார். 16 காட்சிகளுக்கான வசனங்களை படித்த பிறகு அவரால் தொடர்ந்து படிக்க முடியவில்லை. நெஞ்சு வலி கடுமையாக இருந்தது. களைப்பாக இருந்தார்.

இரவு 10 மணிக்கு கோவையில் டாக்டர்களின் ஆலோசனையின் பேரில் கோவை குப்புசாமி நாயுடு ஆஸ்பத்திரி என்னும் தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு தேவரின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டது. ஹார்லிக்ஸ் குடித்துவிட்டு பத்திரிகைகள் படித்தார். அடுத்து நடக்க இருக்கும் படப்பிடிப்பு பற்றி உதவியாளர்களிடம் விவாதித்துக் கொண்டிருந்தார்.

காலை 9 மணிக்கு அவருக்கு மீண்டும் மாரடைப்பு ஏற்பட்டது. டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் பலன் இல்லாமல் காலை 10 மணிக்கு உயிர் பிரிந்தது.

தேவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்ட தகவல் தெரிந்ததுமே அவரது ஒரே மகன் தண்டாயுதபாணி வெள்ளிக்கிழமை காலை சென்னையிலிருந்து கோவைக்கு விமானம் மூலம் விரைந்தார். ஆனால் அவர் கோவையை அடைவதற்கு முன்பே தேவர் மரணித்துவிட்டார். கோவை விமான நிலையத்தில் இறங்கியதுமே தந்தையின் மரணச்செய்தி கேட்டு கதறி அழுதார் தண்டாயுதபாணி.

தேவர் இறந்தபோது அவரது மனைவி மாரிமுத்து அம்மாள் சென்னையில் இருந்தார். கணவர் இறந்த செய்தி கேட்டதும் அவர் மயக்கமடைந்து வீழ்ந்தார். உடனே அனைவரும் விமான மூலம் கோவைக்குப் பறந்தனர்.

சின்னப்ப தேவருக்கு தண்டாயுதபாணி ஒரே மகன். லட்சுமி-ஜெகதீஸ்வரி என்ற இருமகள்கள் உண்டு. மகன் தண்டாயுதபாணிக்கும் மகள் லட்சுமிக்கும் திருமணமாகிவிட்டது.

தேவரின் மரணச் செய்தி கேட்டு தமிழ்த்திரைப்பட உலகம் மிகவும் அதிர்ச்சியடைந்துவிட்டது. சென்னை நகர ஸ்ரூடியோக்களில் உடனே படப்பிடிப்பு நிறுத்தப்பட்டது.

தேவரின் இறுதி ஊர்வலம் சனிக்கிழமை காலை 11 மணிக்குத் தொடங்கியது. இந்த இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்காக முதல்வர் எம். ஜி. ஆர் எல்லா அலுவல்களையும் நிறுத்திவிட்டு கோவைக்கு வந்திருந்தார்.

### ஊர்வலத்தில் கலைஞர்கள்

ஊர்வலம் துவங்கியபோது தேவரின் தம்பி டைரக்டர் எம். ஏ. திருமுகம், எம். ஜி. ஆரைக் கட்டிப்பிடித்து அழுதார். ஊர்வலத்தில் எம். ஜி. ஆர். — எஸ். எஸ். ராஜேந்திரன்—மேஜர்சுந்தரராஜன்— கமலஹாசன்— ரஜனிகாந்த்— நாகேஷ்—விஜயகுமார்--சுருளிராஜ்—வீரப்பா — ஸ்ரீகாந்த்— கோபாலகிருஷ்ணன் — ஜெய்கணேஷ் — முரளிமோகன் — டைரக்டர்கள் பாரதிராஜா— குற்றாலலிங்கம் —மனோரமா— ஸ்ரீதேவி—காஞ்சனா— ஜெயா-புஷ்பலதா ஆகியோர் கலந்துகொண்டனர். ஊர்வலம் புறப்பட்ட இடத்திற்கும் மயானத்திற்கும் இடையே உள்ள தூரம் 3 மைல். எம். ஜி. ஆர். உட்பட அனைவரும் கொளுத்தும் வெயிலில் 3 மைல் தூரமும் நடந்தே சென்றனர். மயானத்தில் தேவரின் உடலை ஜெய்சங்கர் — விஜயகுமார் — அசோகன் — கண்ணதாசன்— டைரக்டர் ஸ்ரீதர் ஆகியோர் சுமந்தனர்.

தேவரின் உடல் தகனம் செய்வதாக திட்டமிட்டு இருந்தனர். ஆனால் கடைசி நேரத்தில் மாற்றப்பட்டு அவரது உடல் உட்கார்ந்த நிலையில் குழிக்குள் அடக்கம் செய்யப்பட்டது. அப்போது தேவரின் ஒரேமகன் துயரம் தாங்காமல் வாய்விட்டுக் கதறினார். எம். ஜி. ஆர். அவரை அணைத்து ஆறுதல் கூறினார்.

தேவரின் இறுதி ஊர்வலம், உடல் அடக்கம் ஆகியவை சினிமாப் படமாக எடுக்கப்பட்டுள்ளன.

### ஏழ்மையில் பிறந்து முன்னேறியவர்

தேவரய்யா என்று அனைவராலும் மரியாதையுடன் அழைக்கப்பட்டவர் சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர். ஏழையாகப்பிறந்து கடின உழைப்பால் முன்னேறி இறுதிக்காலம் வரை திரைப்படத்துறையில் அசைக்க முடியாதவராகத் திகழ்ந்தார்.

1915ம் ஆண்டு ஜூன் மாதம் 28ம் திகதி கோவையில் பிறந்தார். தந்தை அய்யாவு தேவர், தாயார் ராமாக்காள் இந்த ஏழைத் தம்பதிகளுக்கு 6 மகன்கள். இவர்களில் இரண்டாவதாகப் பிறந்தவர் சின்னப்பதேவர்.

3ம் வகுப்பு வரை படித்த இவர் ஏழ்மை காரணமாக பள்ளிப்படிப்பை நிறுத்தி விட்டார். சிறுவயதிலேயே நெசவாலைகளில் பணிபுரிந்தார். அப்போது அவரது மாதச் சம்பளம் 6ரூபாதான். அக்காலத்து சினிமாப் படங்களைக் கண்ட அவர் சினிமாவில் நடிக்க ஆசை கொண்டார். அதற்காக உடற்பயிற்சி செய்து உடலை கட்டுமஸ்தாக்கிக்கொண்டார். இவரது உடலே இவருக்கு சினிமா வாய்ப்பைப் பெற்றுத்தந்தது. பி. ஆர். பந்துலு நடித்த திலோத்தமா என்ற படத்தில் சண்டைக்காட்சியில் முதன் முதலாகத்தோன்றினார். பிறகு படிப்படியாக முன்னேறி சொந்தப்படங்கள் எடுக்க ஆரம்பித்தார்.

இதுவரை 43 படங்களை தயாரித்துள்ளார். இதில் 6 இந்திப்படங்கள், 1 தெலுங்குப்படம். 25 ஆண்டுகளுக்கு முன் முதன் முதலாக சொந்தத்தில் 'தாய்க்குப் பின் தாரம்' என்ற படத்தை எடுத்தார். அதில் தொடங்கிய வெற்றி இறுதியாக தயாரித்த 'ஆட்டுக்கார அலமேலுவரை' நீடித்தது. இதனால் இவர் தமிழகத்தின் தன்னிகரற்ற படஅதிபராக விளங்கினார்.

பெரிய நடிகர் நடிகைகள் இருந்தால் தான் படம் ஓடும் என்ற நிலையை மாற்றியவர் தேவர். மேலும் ஆடு, மாடு, யானை, புலி, பாம்பு போன்ற மிருகங்களுக்கு பயிற்சி கொடுத்து படங்களில் நடிக்க வைத்து வெற்றி கண்டவர் தேவர். மிருகங்களை வைத்து படம் தயாரிப்பதில் இன்றுவரை இவருக்குச் சவால் விடும் அளவுக்கு எந்தப் பட அதிபரும் தோன்றவில்லை.

புகழ்பெற்ற சீசன் நடிகர்களை வைத்து படங்கள் எடுப்பதிலும் தேவர் யாருக்கும் பின்தங்கியவர் அல்ல. எம். ஜி. ஆரை கதாநாயகனாக வைத்து அதிக படங்களை வெளியிட்ட தேவர், சிவாஜிகணேசனை வைத்து ஒரு படம் கூட எடுத்ததில்லை. அவர் நடிப்பதற்கேற்ற கதை தன்னிடம் இல்லை என்று தேவர் காரணம் கூறுவதுண்டு.

'ஹாத்தி மேராசாத்தி' என்ற படத்தின் மூலம் இந்திப்படவுலகிலும் காலடி வைத்து அதிலும் பெரும் வெற்றி கண்டார். தான் தயாரிக்கும் எல்லாப் படங்களிலும் ஏதாவது சிறியவேடத்தில் தோன்றிதலையைக் காட்டிவிட்டு மறைந்து விடுவார். நடிப்பதோடு கதை வசனம், டைரக்ஷன் பொறுப்புக்களையும் தேவர் கவனித்து இருக்கிறார். தன்படங்களில் எல்லாம் முருகன் படத்தை காட்டுவதற்குத் தவறமாட்டார். 'துணைவன்' 'தெய்வம்' 'திருவருள்' ஆகிய படங்கள் முருகனின் பெருமையை கூறுவதற்காகவே எடுக்கப்பட்டதாகும். தமிழ்நாட்டின் பிரபல உபந்நியாசகரான கிருபானந்த வாரியாரையே தனது படத்தில் நடிக்க வைத்த பெருமை தேவருக்கு உண்டு.

தமிழ் நாட்டில் தேவர் பெயரில் மண்டபமோ அல்லது அறக்கட்டளைகளோ இல்லாத முருகன் கோயில்களே கிடையாது. ஆண்டுதோறும் திருச்செந்தூர் முருகன் கோயிலுக்குச் சென்று விரதம் இருக்கத் தவறமாட்டார்.

ஏராளமான நன்கொடைகள் வழங்கி இருக்கிறார். வறுமையால் வாழும் பல சினிமா எழுத்தாளர்களுக்கு பணஉதவி செய்து இருக்கிறார். நாணயமான பட அதிபர் என்று சினிமா வட்டாரத்தில் புகழ் பெற்றவர் தேவர். திட்டமிட்டு படப்பிடிப்பை தொடங்கி குறிப்பிட்ட நாளில் படத்தை வெளியிட்டு விடுவார். நடிகர்களுக்கு பேசிய பணத்தை உடனே கொடுத்தும் விடுவார்.

### எம். ஜி. ஆர்.- கருணாநிதி கவலை

''இல்லாதவருக்கு வாரி வாரி வழங்கிய வள்ளல்—நாணயமானவர் நம்மைவிட்டுப்போய் விட்டார். திரைப்படத்துறையில் இனி எதிர்பார்க்க முடியாத உழைப்புக்கு சொந்தக்காரரை தனது உழைப்பால் உயர்ந்தவரை சின்னப்பதேவரைப்போல் ஒருவரை இனி காணப் போவதில்லை; கிடைக்கப் போவதில்லை. சின்னப்பதேவரின் மறைவால் ஏற்பட்டுவிட்ட என் இதயப் புண்ணில் இருந்து கசியும் செந்நீர் தேவரின் குடும்பத்தினரின் கண்ணீருடன்கலக்கிறது'' என்று தமிழகத்து முதல்வர் எம். ஜி. ஆர். தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டார்.

### கலைஞர்

'உழைப்பைமட்டுமேபெரும் மூலதனமாகச்கொண்டு கலை உலகில் அனைத்து இந்திய புகழை ஈட்டியவர். அடக்கம், எளிமை, அன்பு இவற்றின் உறைவிடமாகத் திகழ்ந்த அந்த நல்லவரின் மறைவு அதிர்ச்சி அளிக்கக்கூடியதாகும். அவரது குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன் என்று கருணாநிதி தெரிவித்தார்.

## ''உலகின் அழகு''

- வி. ரி. தமிழ்மாறன் -

தம்பிக் கழகு தலைமுடி வளர்த்தல்
தவணை தோறும் சோதனை எடுத்தல்
'எம்பி'க் கழகு எங்கும் திரிதல்
ஏற்றம் கிடைத்தால் எதையும் மறத்தல்

தங்கைக் கழகு தலையிடி கொடுத்தல்
தன்னை மறந்த தலைக்கனம் பிடித்தல்
வங்கிக் கழகு வட்டியும் கடனும்,
வாங்கினோர்க் கழகு வழக்கும் கணக்கும்.

பள்ளிக் கழகு பாடங் கடத்தல்,
படிப்போர்க் கழகு படமே பார்த்தல்,
கொள்ளைக் கழகு கூட்டுச் சேர்தல்
குணத்தி னழகு 'குண்டுணி' விடுதல்

காதலிக் கழகு கடிதமும் கையும்
காதல னழகு காசும் பையும்
மனைவிக் கழகு மாதச் சம்பளம்,
மகிழ்ந்தே கொடுத்தல் மணாளர்க் கழகு

பந்தம் உண்டெனில் பதவி யழகு,
பட்டம் பெற்றால் பட்டினி யழகு
சொந்தம் உண்டெனில் சோதனை யழகு,
சூ கும' உலகில் சூழ்ச்சியே யழகு!

## 44,000 ஆண்டுகளுக்கு முன் புதையுண்ட யானையின் உடல் முழுதாகக் கண்டுபிடிப்பு!

ரஷ்யாவில் சில மாதங்களுக்கு முன்னர் ஒரு கோஷ்டியினர் சைபீரியாவில் புராதன நதியின் படுகையில் தங்கம் எடுக்க ஆய்வு நடத்தியபோது ராட்சத யானை ஒன்றை தோண்டி எடுத்தனர். இது இந்திய யானை இனத்தின் மூதாதை இனத்தைச் சேர்ந்ததாகும்.

இந்த ராட்சத யானை இனத்தைச் சேர்ந்த யானைக் குட்டி ஒன்று சுமார் 44 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஏரி அல்லது புதை சேற்றில்புதையுண்டுஇறந்துவிட்டிருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது, இது அழுகி மண்ணோடு மண்ணாகிவிடாமல் உறைபனி காரணமாக இத்தனை ஆண்டுகளாக அப்படியே முழுதாக இருந்தது.

இந்த யானையைக் கண்டு பிடித்தவர்கள் சமீபத்தில் அந்த யானையின் தொடைச் சதையிலிருந்து ஒரு பகுதியையும் உறைந்த ரத்தத்திலிருந்து ஒரு பகுதியையும் அமெரிக்க விஞ்ஞானி ஒருவருக்கு அனுப்பினர், அந்த விஞ்ஞானி அந்த யானையின் கட்டமைப்பை ஆராய்ந்து வருகிறார்.

கடைசி பனி யுகத்தில் உலகம் முழுவதும் காணப்பட்ட 'மம்மோத்' எனப்படும் ராட்சத யானைகளின் வழித்தோன்றல்களே இப்போதுள்ள இந்திய-ஆபிரிக்க யானைகளாகும் என்று அமெரிக்க கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஆலன் வில்சன் என்னும் அமெரிக்க விஞ்ஞானி கூறுகிறார்.

ரஷ்யாவில் புதையுண்டு கிடந்த யானையும் மம்மோத் இனத்தைச் சேர்ந்ததே. பரிணாம வளர்ச்சியில் இத்தனை ஆண்டுகளில் ஏற்பட்ட மாறுதல்கள் தமது ஆய்வில் தெரியவரலாம் என்றும் அவர் கூறுகிறார்

# ஜயந்தி

அன்று முதலாகத் தாமரைக்கேணி கிராமத்துப் புலரிக் கன்னியர் கணிப்பிலும் நன்மதிப்பிலும் நான் உயர்ந்து நின்றேன். அவர்கள் தங்களுக்குள்ளாக என்னைக் குறித்துப் பேசிக்கொண்டபோது அவர் தம்குரலில் யாழின் இன்னிசை குழைய ''யாழ்ப்பாணம் மாத்தயா'' என்று மனமுவக்க குறிப்பிட்டார்கள். நேரிலும் கூட சிலசமயம் அவ்விதமாக அழைத்து மகிழ்ந்தார்கள். அவர்தம் அன்புப் பொய்கையில் ஜயந்தியின் நேசவாஞ்சை நாளாந்தம் முருகவிழ்த்து மலர்ந்து மணம் பரப்பிற்று.

இரண்டொரு தினங்களில் ஜயந்தி மீண்டும் என்முன் தோற்றினாள். வேலைஆரம்பத்தில் எனக்கு நிறைய ஓய்வு கிடைத்ததால் அந்நேரத்தில் ஏதும் புத்தகமோ சஞ்சிகைகளோ வாசித்துக்கொண்டிருப்பேன். அன்றும் அவ்விதமாக வாசிப்பதில் ஆழ்ந்து போயிருந்தபோதுதான் 'மாத்தயா' என்ற மென்குரலின் அழைப்பு கவுண்டர் யன்னலூடாகத் தவழ்ந்து வந்து என்கவனத்தைத் திருப்பியது. யன்னலருகே எழுந்து நின்றேன். செங்காந்தள் இதழ்களாகக் குவிந்தவிரல்களின் பிடிப்புக்குள் இரு பொட்டணங்களை ஏந்தி அழகான இரு சரங்கள் யன்னல் பீடத்தில் தவழ்ந்தன. ''நான் ஜயந்தி மாத்தயா! இவற்றை ஏற்ருள்க! உங்களுக்கென்றே கொண்டுவந்தேன்!'' இரு பொட்டணங்களையும் டிக்கட் கவுண்டர் யன்னலூடாக உள்ளே நகர்த்திக்கொண்டே தன்முகத்தை யன்னலூடாகக் காண்பித்து முகமலர்ந்து நின்ருள் அவள். அக்கம் பக்கமாக வேலையில் ஆழ்ந்து போயிருக்கும் சகஊழியர்களை என்னிரு பக்கலிலும் பார்த்துத் தயங்கியபடி மெல்லக்கை நீட்டி அப்பொருட்களை எடுத்துக் கொண்டு 'இதெல்லாம்ஏதுக்கு ஜயந்தி?' என நவின்று அதற்கு மேல் அந்த சமயம் அவளிடம் யாது மொழிவேன் என எதுவும் தோன்ருமல் நின்றபோது அந்நிலை குறித்து மனமிரங்கினள்போல் ''பொல்காவலை வரைக்குமுரிய ரயில் சலார் குறைவுக்கு இதனை வைத்துக் கொள்ளுங்கள் சேர்! ரயில் போய்விடப்போகிறது. உங்கள் உபகாரசிந்தைக்கு மிக்க நன்றி ஐயா!'' என மளமளவென பொழிந்துவிட்டு உடனே அங்கிருந்துஓடிமறைந்தாள்.

இரு பொட்டணங்களையும் என் ஜாகை விடுதிக்குக் கொண்டுசென்று கட்டவிழ்த்தேன். ஒன்றில் முதல்தரமான கஜு, மற்றதில், ஒரு போத்தலில் 'கமகம'வென்று மணக்கும் பசுந்தயிர். இன்னென்றில் பசுநெய்,

ஜயந்தியை நேரில் பார்த்தபோதெல்லாம் என்கண்கள் எப்படிக்குளிர்ந்ததோ அவ்விதமே அக்கிராம இதயத்தின் அன்பளிப்பும்கூட அப்படி மனம்குளிர்விக்கும் தேனமுதாக இருந்தது.

மற்ருெருநாள், பயணச்சீட்டுப்பெற்றேக வந்த வேருேர் ரயில் பயணிகூடச் சேர்ந்து வந்த பாவனையாக கவுண்டர் யன்னலை மெல்ல அணுகி என் பார்வைக்குத் தோற்றியும் தோற்ருமலும் நின்றவள், ''மாத்தயா எந்நேரமும் புத்தகம் வாசித்தபடிதான்!'' என்று என் காதுக்குள்ளே கிணுகிணுத்தாள். நான் திடுக்கென்று எழுந்ததுமே 'வியாங்கொடைக்கு ஒரு டிக்கட்' கேட்டு மற்ருெரு குகை நீட்டிற்று. கொடுத்தனுப்பிவிட்டு ''உமக்கு எந்த ஊருக்கு டிக்கட் வேணும், சலார் குறைவில்லாமல் இருக்கிறதா?'' என்று ஜயந்தியிடம் வினவினேன்.

''ஆட்களைக் கண்ணிலும் காணுமல் பயணம் அனுப்பி தொலைத்து விடுவதிலும்கூட மாத்தயா எப்பவுமே கனம்தான்! நீங்கள் வாசிக்கும் அந்த சஞ்சிகைகளில் ஒன்றிரண்டு நாங்களும் படித்துப்பார்க்கக் கொடுத்துதவ மாட்டீர்களா சேர்!'' உதட்டில் ரோஜா போதவிழ கொஞ்சி நின்ருள்.

'ஓ' ஆனந்தாக் கல்லூரியா? இவ்வழியால் தினமும்போய் வருகிற ஸீஸன் டிக்கட்டுகள் தானே! அதற்கென்ன. வேண்டுமானால் கொண்டுபோய் வாசித்துவிட்டு என்னிடமே திரும்பக் கொடுத்து விடுங்கள்' நாலைந்து சஞ்சிகை இதழ்களைத் தூக்கிப்போட்டேன். விழுந்தடித்து ஆளுக்கொன்று எடுத்துக்கொண்டு ரயிலைப் பிடிக்க விரைந்தார்கள். அவர்கள் அங்கிருந்துபோய் மறையு முன்னதாகவே ஜயந்தியிடம் தனியாக, ''அன்றைய உமது அன்புப் பொட்டணம் அதி சுவையுடைத்து'' என்று இன் சொல்லாக ஒருவாக்கு மொழிந்து அவளை மனமகிழ்வித்து அனுப்பினேன்.

(தொடரும்)

அ. செ. மு.

## பாறை நிலத்தில் பயன்தரும்சோலை!

கியூபாவில் 'ஜாகுவே கிராண்ட்' என்னும் நகராட்சிப்பிரிவில் 'விக்டோரியா கிரோன்' என்னும் பிரமாண்டமானதோட்டம் பழ மரத் தோட்டமொன்று உள்ளது.

அவ்விடத்தின் நிலம் கற்பாறையாகவும் கீழே சிறிதளவு ஆழத்தில்தான் மண் உடையதாகவும் காணப்பட்டது.

அங்கே தோடைமரத் தோட்டம் உருவாக்கப்பட்டது நம்பமுடியாத செயல் என்றே கருதப்படுகின்றது.

எவ்வொரு செடியும் நடுவதற்கு முன் இயந்திரக்கருவியால் பாறையில் பள்ளம் உண்டாக்குகிருர்கள். பிறகு அந்தப் பள்ளத்தில் வெடிமருந்தை வைத்து பாறையை உடைக்கிருர்கள்.

பிறகு உடைத்த பாறைத் துண்டுகளையும் சல்லிகளையும் 'புல்டோசர்' களால் அப்புறப் படுத்துகிருர்கள்.

ஒரு செடி நடுமுன் 17 தடவை பாறை உடைத்து மண் மாற்றம் செய்யவேண்டியிருக்கிறது. இருந்தாலும் விடாமல் அதனைச் செய்து முடித்து25,000ஹெக்டர் நிலப்பரப்பில் தோடை மரங்கள் ஓங்கி வளர்ந்திருக்கின்றன. இந்தக் காட்சி அப்புதமானது.

கியூபாவின் தோட்டங்கள்எல்லாவற்றையும் விட இதுதான்பெரிதாம்.

(கூ)

# பகுத்தறிவுப் பணியையே மூச்சாக கொண்டிருந்தவர்

# டாக்டர் கோவூர்!

நம் நாட்டுமக்களிடையே பகுத்தறிவு ஆற்றலை வளர்த்த திட்டமேதை, டாக்டர் கோவூர் ஆவார். அவர் சில தினங்களுக்குமுன் கொழும்பில் தனது இவ்வுலக வாழ்க்கையை முடித்துக்கொண்டார் என்ற செய்தி பகுத்தறிவாளர்களுக்கு மிகுந்த கவலை தரும் விஷயமாகும்.

இவர் இலங்கை மக்களிடையே ஏன இந்திய மக்களிடையே கூட அந்தநாளில் நிலவிய பேய் பிசாசு பற்றிய மூடக் கொள்கைகளைக்களைந்து தனது அறிவுத் திறமையாலும், பண்பினுலும் மக்களிடையே பகுத்தறிவினை புகட்டினுர். அவர் மக்களிடையே நிலவிய அறியாமையினை அவர்களுக்கு எடுத்துரைத்து அவற்றினை அடியோடு போக்க முனைந்து அவற்றில் ஓரளவு வெற்றியும் கண்டார்.

டாக்டர் ஏபிரகாம் கோவூர் இந்தியாவில் கேரளத்தில் 1898ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பத்தாம் திகதி கிறிஸ்தவப் பாதிரியார் ஒருவரின் மகனுகப் பிறந்தார்.

இவர் தனது சிறுபராயத்தில் கேரளாவிலுள்ள பிரபல கல்லூரி ஒன்றில் படித்துக் கொண்டிருக்கும் போதே மக்களிடையே நிலவும் ஆவிகள், பேய்கள் பற்றிய மூடநம்பிக்கைகளை அறிவதிலும் அவற்றைப்பற்றி ஆராய்வதிலும் அதிகம் நாட்டம் காட்டினுர். இதற்காக அவர் பல நூல்களை வாசித்தறிந்ததுடன் பல அறிஞர்களிடம் இவற்றைப் பற்றி வாதங்கள் நடத்தினுர்.

பின்னர் டாக்டர் கோவூர் மேற்படிப்புக்காகக் கல்கத்தா சென்ருர். அங்கு அவர் தாவரவியல் பட்டப்படிப்பை மேற்கொண்டு டாக்டர் பட்டம் பெற்ருர். பின் இவர் 1930ம் ஆண்டளவில் இலங்கைக்கு வந்து யாழ்ப்பாணத்தில் பிரபலமான யாழ். மத்திய கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றிக் கொண்டு தனது ஓய்வு நேரங்களில் பகுத்தறிவு நூல்களை ஆராய்ந்தார். வேறும், உலகில் பிரபலமான பகுத்தறிவாளர்களுடன் தொடர்பு கொண்டு பல விடயங்களை அறிந்து கொள்வதில் நாட்டம் காட்டினுர். அத்துடன் கோவூர் பல பொதுக் கூட்டங்கள் கூட்டியும், துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்து விநியோகித்தும் மூட நம்பிக்கைகளை அகற்ற முயற்சி எடுத்தார்.

இவர் மக்களின் சில பிரச்னைகளையும், நோய்களையும் மனேதத்தவ முறையாலும் தீர்வு காணுவதில் வெற்றியீட்டினுர்.

### அவர் விடுத்த சவால்

டாக்டர் கோவூர் கடவுள் இல்லை என்றும் இவை இருப்பின் தமக்கு நிரூபித்துக் காட்டும் படியும், பல சமயப் பெரியார்களிடம் சவால் விட்டார். இதனுல் மக்கள் பலர் கோவூரை வெறுத்தனர். சிலர் அவர் கொள்கைகளை பின்பற்றத் தொடங்கினுர்கள். இவர் தானே பல அற்புதங்களைச் செய்து காட்டி அவை வெறும் தந்திரங்களே யென மக்களுக்கு விளக்கினுர்.

ஆசிரியர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற கோவூர் பின்பு இறக்கும் வரை பகுத்தறிவுப் பணியிலேயே தனது முழு நேரத்தையும் செலவிட்டார். இவருக்கு இறக்கும் போது வயது எண்பது. இவர் சில ஆண்டுகளாக இலங்கைப் பகுத்தறிவாளர் சங்கத்தின் தலைவராகப் பதவி வகித்துள்ளார்.

டாக்டர் கோர்வூர் தனது மனைவி காலமானதும் அவரின் உடலினை கொழும்பு மருத்துவ பீடத்திற்கு கையளித்து ஒரு புது சகாப்தத்தை ஏற்படுத்தினுர்,

இன்று நம்மிடையே இருந்து பிரிந்த பகுத்தவுத் தந்தை என வர்ணிக்கப்படும் டாக்டர் கோவூர் இறப்பதற்கு முன் தனது இரு கண்களையும் கண்தானச் சங்கத்திற்கும் தனது உடலை கொழும்பு மருத்துவக் கல்லூரிக்கும் அன்பளிப்பாக எழுதி வைத்து விட்டுக் காலமானுர்.

இவரின் அனுபவக் குறிப்புகள் சில புத்தகவடிவில் கூட வெளிவந்துள்ளன.

—விசாள்—சந்திர குமார்

# தமிழக— நினைவுகள்-4

இலங்கையின் கலை இலக்கியம் பத்திரிகைத் துறைகளைப் பற்றிக் கேட்டதும், எனக்கு உற்சாகம் ஏற்பட்டு விடுகிறது.

ஈழத்துக் கலை, இலக்கியத் துறைகளில் இந்திய பத்திரிகைகள் சஞ்சிகைகள் ஏற்படுத்தியுள்ள பாதிப்பை எடுத்துச் சொல்கிறேன்... இல்லை ... ஒரு சொற்பொழிவே நிகழ்த்துகிறேன்.

'உங்கள் நாட்டுச் சஞ்சிகைகள், பத்திரிகைகள் எங்கள் நாட்டில் வந்து மலைபோல குவிகின்றன. ஆனுல், எங்கள் நாட்டுச் சஞ்சிகைகளையோ பத்திரிகைகளையோ அல்லது இலக்கியப் படைப்புகளையோ உங்கள் நாட்டில் இறக்குமதி செய்ய முடியாத சூழ்நிலை, இதனை உங்கள் அரசல்ல. மத்திய அரசு கட்டுப்பாடு விதித்திருக்கிறது' என்கிறேன்.

'தினத்தந்தி' காரியாலய முக்கியஸ்தர்கள் என் கருத்துக்களை ஆவலுடன் கேட்கின்றனர்.

'திருப்பூர் மாநாட்டில் இதே கருத்தைத்தான் வலியுறுத்தப்போகிறேன். அத்துடன் தமிழகத்தில் நான் சந்திக்கும் முக்கியமானவர்களிடமெல்லாம் இதே கருத்தைத்தான் எடுத்துரைப்பேன்' என்கிறேன்.

பேட்டி முடிந்ததும், திருச்சி பாரதனிடமும், 'தினத்தந்தி' பத்திரிகை நிறுவனத்தைச் சேர்ந்தவர்களிடமும் மீண்டும் சந்திப்பதாக விடைபெறுகிறேன்,

நாலும், நண்பர் கனகராஜும் 'தினத்தந்தி' காரியாலயத்தை விட்டு வெளியே வந்தோம்.

நண்பர் கனகராஜின் மூலம் பல இளைஞர்கள் எனக்கு அறிமுகமானுர்கள்.

திருச்சியில் நான் சந்தித்த இளைஞர்கள் என்னிடம் அதிகமாகக் கேட்டது இரண்டு கேள்விகள்.

—அந்தனி ஜீவா

ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற வன்செயல்களின் போது தமிழர்கள் தனிநாடு பெறுவார்களா?

அடுத்தது...1971-ம் ஆண்டு நாட்டில் நடைபெற்ற சம்பவங்களைப் பற்றியும் அந்தச் சம்பவத்தின் நாயகனுன விஜயவீரா பற்றியும் இந்த இரண்டு கேள்விகளுக்கும் நான் அளித்த பதில் அவர்களுக்குத் திருப்திகரமாக இல்லாவிட்டாலும் எனக்கும், என் மனச்சாட்சிக்கும் நேர்மையானதாகப்பட்டது.

இரவு திருப்பூருக்குச் செல்ல வேண்டியிருப்பதால் கொஞ்சம் ஓய்வெடுக்கலாமென்று குறிஞ்சி ஹோட்டலை நோக்கி நடையைக் கட்டினேன்.

குறிஞ்சிஹோட்டலில் வந்து சந்திப்பதாகக் கூறி நண்பர் கனகராஜ் விடைபெற்ருர்.

நான் தனிமையில் திருச்சி நகரில் நடைபெறும் நாடகங்களைப் பார்த்தவாறு குறிஞ்சி ஹோட்டலை நோக்கிவந்தேன்.

திருச்சி நகரில் எங்கு பார்த்தாலும் சினிமா போஸ்டர்களும், அரசியல் கட்சி கூட்டங்களின் போஸ்டர்களும் அரைநிர்வாண பெண்களைப் போல் காட்சியளித்தன.

தமிழக சினிமா மக்களை எவ்வளவு மலினப்படுத்தியுள்ளது என்பதை இந்த சினிமா போஸ்டர்களையும் அரசியல் விளம்பரங்களையும் பார்த்த பொழுது என்னுள்ளம் வேதனைப்பட்டது.

போலி ரசனை உணர்வை ஏற்படுத்திய தமிழக சினிமா, அறிவு வளர்ச்சியற்ற தமிழக மக்களின் வாழ்வோடு ஒன்றிப்போய்விட்டது. சினிமா பார்ப்பது ஓர் அத்தியாவசிய தேவையாகிவிட்டது.

தமிழகத்திலுள்ள நாலரைக் கோடி மக்களில் நாலு கோடியாவது சினிமா மாயையில் மூழ்கிக்கிடந்தது.

தமிழக சினிமா தமிழக கலை இலக்கியங்களை மாத்திரமல்ல ஈழத்துக் கலை, இலக்கியங்களையும் கொச்சைப்படுத்தியுள்ளது.

இதை எல்லாம் எண்ணிப் பார்த்தவாறு ஒரு ரூபாய் கொடுத்து ஆப்பிளபழம் ஒன்றை வாங்கிக்கொண்டு குறிஞ்சியை அடைந்தேன்.

குறிஞ்சிஹோட்டலில் திருப்பூர் செல்வதற்குத் தயாராக கனகராஜை எதிர்பார்த்துக் காத்திருந்தேன்

(தொடரும்)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம்.ஜி.ஆர்.-ஜெயலலிதா
அன்னமிட்டகை

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 4-45, 7-15, 10-00
ஜெமினி-பத்மினி
மீண்டசொர்கம்

வின்ஸர் போன்: 466 தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர்.-முத்துராமன்
ஜெயலலிதா-சோ
நடித்த
ஒரு தாய் மக்கள்
(புதிய பிரதி)

REGAL (Jaffna) Phone: 360
Daily 4-30, 7-00,& 9-30 p.m
Glendo Jackson, Oliver Reed in
THE TRIPLE ECHO
(Color-adu ts only)

தினசரி 4 காட்சிகள் 138-வது தினமாக
ராணி
(யாழ். நகர்)
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி,ஞாயிறு 4 காட்சிகள்
ஆ ல ய ம ணி
(புதியபிரதி)

லிடோ போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
தங்கத்திலே வைரம்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி-சாவித்திரி
நடித்த
கொஞ்சும் சலங்கை
(ஈஸ்ட்மன்கலர்) [புத்தம்புதிய பிரதி]
3-ந் திகதி முதல்
பட்டி விக்கிரமாதித்தன்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
∴ ஜெமினி ∴ சரோஜாதேவி
∴ வாணிஸ்ரீ ∴ நாகேஷ்
நடித்த
தாமரை நெஞ்சம்
(புத்தம்புதிய பிரதி)

சாந்தி போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ்ப்பாணம்) நாகேஷ்...ராஜ்ஸ்ரீ... முத்துராமன்
(இரு வேடங்கள்) K. பாலசந்தரின்
அனுபவி ராஜா அனுபவி
(புதிய பிரதி)
அடுத்த வெளியீடு புதிய பிரதியாக புதுப் பொலிவுடன் புரட்சி நடிகரின் அரச கட்டளை

5-10-78 வரை மட்டும்
ராஜா தினசரி 4 காட்சிகள் சிவாஜிகணேசன்
(யாழ்ப்பாணம்) கிரிஜா-கண்ணம்மா
T. R. ராஜகுமாரி S. A. நடராஜன் நடித்த
மனோகரா (புத்தம் புதிய பிரதி)

Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
BOMB AT 10.10
(warfilm)

# உங்கள்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு.கண்ணன்
தென் மட்டுவில்.
சாவகச்சேரி.

எனக்கு சுவீப் அதிர்ஷ்டம் உண்டா?

உழைத்துச் சுயமாக உயர்வீர் நீர். இதுவே உமக்கு சுவீப்

இலட்சியங்கள் நிறைவேறுமா?

நிறைவேற்றும்படி ஆண்டவனிடம் முறையிடுங்கள்.

எழுத்துத்துறையில் நல்ல எதிர்காலம் உண்டா?

கடின முயற்சி தேவை.

எனது பெயர் பொருத்தமானதா?

பொருத்தமானதே.

வாலை ஆனந்தன்
பிரதான ரோட், கிளிநொச்சி.

கேள்வி...?

பதில்: உமது நிலையில் கடைசிவரை மாற்றமில்லை.

செல்வி கே. வி,
கனகசபை ரோட்,
மானிப்பாய்.

எனக்கு எப்போது வேலை கிடைக்கும்? என்ன வேலை?

அடுத்த ஆண்டு-எழுத்தை சம்பந்தமான வேலை கிடைக்கும்.

எனக்கு எப்போது திருமணம் நடக்கும்? காதல் திருமணமா?

திருமணமும் அடுத்த ஆண்டுதான். காதல் மணம் தான்.

நான் எப்போது நிம்மதியுடனும், சுதந்திரத்தினுடனும் வாழ்வேன்?

திருமணத்தின் பிறகு வாழ்வீர்கள்.

திரு. பி. வி. ஆர்.
அம்பனை, தெல்லிப்பழை.

எங்கள் குடும்பம மகிழ்ச்சியாகவும், சந்தோஷமாகவும் இருக்க வழியாது?

இது என்ன கேள்வி பணம்தான் முக்கியம். உங்கள் குடும்பத்தில் மகிழ்ச்சியும் சந்தோஷமும் உண்டாகப் பணம் சம்பாதியுங்கள்.

நான் சாவகலாசாலை செல்வேனா?

செல்வீர்கள்.

நான் வெளிநாடு செல்வேனா?

வாய்ப்புண்டு.

எனது திருமணம் எப்போது எப்படி நிகழும்?

மூன்று ஆண்டுகளுக்கு அவசரப்படாதிர்கள்.

எனது அக்கா வெளிநாடு செல்வாரா?

கிடையாது.

அவரது திருமணம் எப்போது?

இரண்டு ஆண்டுகளாகும்.

தங்கைகளின் படிப்புப் பற்றியும் அவர்களின் எதிர்காலம் தொழில் பற்றியும் சில வரிகள்;-

தங்கைகள் எதிர்காலத்தில் நன்ருகப் படித்து நல்ல வாழ்க்கைத் துணையுடன் கவலையில்லாமல் உங்களைவிட மேன்மையான நிலையில் வாழ்வார்கள்.

செல்வி...
(பெயர் குறிப்பிட விரும்பாத வாசகி) நெடுந்தீவு மேற்கு.

நான் தற்போது அரசாங்க உத்தியோகம் பார்க்கிறேன். தொடர்ந்து படிக்க உள்ளேன். அதில் முன்னேற்றமுண்டா? பதவி உயர்வு கிடைக்குமா?

முன்னேற்றம் உண்டு. பதவி உயர்வு கிட்டும்.

எனது இரண்டு சகோதரிகளும் ஐந்து சகோதரர்களும் படிக்கிருர்கள். இவர்களது எதிர்காலம் எப்படி இருக்கும்?

நன்ருகவே இருப்பார்கள்.

எனது திருமணம் எப்போது? கணவர் எத்துறையில் உத்தியோகம் பார்ப்பவர்?

நான்கு வருடங்களுக்குத் திருமணமில்லை. கணவர் தொழில் துறையில் உள்ளவர்.

வெளிநாடு செல்வேனா? பிற்கால வாழ்வு எப்படி அமையும்?

வெளிநாடு செல்ல முடியாது. பிற்கால வாழ்வு இனிக்கும்.

திரு...
(பெயர் குறிப்பிட விரும்பாத வாசகர்) மானிப்பாய் வடக்கு

கேள்வி...?

பதில்: உமது வாழ்க்கையை அந்தப் பெண் அழுத்துவதாக நினைப்பது உமது பிரமையே, அவளை நீர் அடைய முடியாது.

இரண்டு ஆண்டுகளில் சுக வாழ்வு மலரும். உமது திருமணம் நடப்பது...!

# ஒரு புதிய...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டம்... டமார்... டமார் ... டும்...

பஸ்சின் பிற்பக்கம் உடைவதுபோற் சத்தங்கள்...

நல்ல இருட்டு.

பின்புறத்தில் இருந்த இலக்கத் தகடு பிரித்தெடுக்கப்பட்டு எதிரேயிருந்த பற்றைக்குள் எறியப்பட்டது.

''டேய் ... பஸ்ஸைஉடையாதே. இது பொதுச் சொத்து'' ஒரு வளர்ந்த மாணவன் சொன்ஞன்

''உடைத்தால் ட்றைவர் தானே குற்றம்கட்டவேணும்'' ஒரு பெரியவர் சொன்ஞர்.

எந்தப்புத்திமதியையும் கேட்கும் நிலையில் இல்லையே இன்றைய இளைஞர்வட்டம், பஸ்சின் உள்ளே இடமிருந்தாலும் ஃபுட்போட்டில் நிற்பார்கள். உள்ளுக்குப் போங்கோ என்று வாய் நோக எவ்வளவுதான் கண்டக்டர் கத்திஞலும் போகமாட்டார்கள். எதைச்சொன்ஞலும் எதிர்க்கும் மனப்பான்மை...தாங்கள் எண்ணுவதும் சொல்லுவதுமே சரிசெயன்றகொள்கை. இப்படித்தான் இன்றைய மாணவன் வளர்ந்துகொண்டிருக்கிருன்...ஏதோ நீதியான போராட்டம் ஒன்றை நடத்தி வெற்றிவாகை சூடியவர்கள் போன்ற களிப்பில் துள்ளிக் குதித்தார்கள் இவர்கள்

பாவம் பஸ்போய்விட்டது

அடுத்த நாட்காலை. அதிகாலையில் வந்தது அந்த பஸ். அதன் சாரதி அரசடிக் கடைக்கு முன்ஞல் பஸ்ஸை நிறுத்திவிட்டு இறங்கி வந்தார். நின்றவர்களிடம் சொன்ஞர், நேற்றிரவு இந்த பஸ்ஸை நான்தான்ஓட்டினேன். இதிலை வைத்து பின்புறத்தில் இருந்த நம்பர் தகட்டை உடைத்துப் போட்டார்கள் இங்கேயுள்ள பொடியன்கள்... நான் முப்பது ரூபாகுற்றம்கட்டவேணும்...''

''அப்படியா...?''

கேட்டவர்கள் வெட்கமும், வேதனையும் அடைந்தார்கள்.

''இந்தப் பிள்ளைகள் படிக்கப்போகவென்று, ஒருபாடசாலை 'பஸ்' கேட்டு நாங்கள் எழுத, அவர்கள் ஒரு பஸ் விட்டவர்கள்... இதுகள் இப்படிச் செய்தால்...பிறகு நாங்கள் எந்த முகத்தோடை அவர்களைச் சந்திக்கலாம்...''

சாவகச்சேரிக்குப் போய்த் திரும்பும் இதே பஸ் மீண்டும் எட்டு மணிக்கு இவ்வழியே வரும் மாணவரை ஏறிப் போக...

பஸ் வந்தது. ஆஞல் நிற்கவில்லை.

இடம் இருந்தும் நிற்கவில்லை.

பாவம் ஐம்பதுக்கு மேற்பட்ட மாணவ, மாணவியர் எல்லோரும் நடந்து கண்டி ரோட் வரை போஞர்கள் பஸ் எடுக்க,

புளியமரத்துக்குப் பின்ஞல் கொய்யாப் பற்றைக்குள் கிடந்த நம்பர் தகட்டின் சிகப்பு இலக்கங்கள் அவர்களைப் பார்த்துச் சிரிப்பன போலப் பளிச்சிட்டன.

இதே மாணவரிடம் ஆண்டுதோறும் எறிவாங்கும் புளியமரமும், பஸ் தரிப்பிடம் என்ற பெயரில் சனசமூக நிலையத்தினரால் நிறுவப்பட்ட ஓலைக் கொட்டிலும். அவர்கள் எதுவித ஆர்ப்பாட்டமுமின்றி நடப்பதைப் பார்த்து நகைப்பதுபோன்று காற்றில் அசைந்தாடின.

நான் கதையை முடித்தேன்.

பிறகு என்ன நடந்தது...? பஸ் இப்போதும் பிள்ளைகளை ஏற்ருமல் போகிறதா? என்று வருத்தத்தோடு கேட்டார் மாஸ்டர்.

ஒரு கிழமை தண்டனை நீடித்தது. பிறகு சாரதியிடம் சொல்லி ... மாணவர்கள் மன்னிப்புக் கோருவதாகச் சொல்லி மீண்டும் மாணவர்களை ஏற்றிச்செல்ல வழிசெய்தோம் என்றேன்.

நிச்சயமாக புதிய சமுதாயம் படைக்கப்போகின்றவர்கள் இவர்களல்ல என்ருர் அவர், ஒரு பெருச்சோடு. அப்படியென்ருல் இவர்கள்...?

(யாவும் கற்பனை)

# தமிழ்நாட்டு...

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

பாதிப்பை ஏற்படுத்தித்தான் உள்ளன. அச்சுச்செலவு அதிகரித்திருப்பதால் எமதுசஞ்சிகைகள் உங்கள் சஞ்சிகைகளைவிட அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. அதேசமயம் உங்கள் நாட்டிலிருந்து வரும் சில ஜனரஞ்சக சஞ்சிகைகளும் படங்களும் எமது நாட்டுக்கு ஆரோக்கியமாக இல்லை.''

இலங்கையில் தமிழ்மொழியின நிலைபற்றி அவர் விளக்கியபோது, ''ஒவ்வொரு தமிழ் சொல்லிலும் சுத்தமான தமிழ் இருக்கவேண்டும்'' என்று கூறும் தமிழ் தீவிரவாதிகளுக்கும் தமிழுடன் ஆங்கிலத்தை கலந்துபேசும் ஆங்கிலமோகப் படைத்தவர்களுக்கும் நான் எதிரானவன் என்ருர். இந்த இருசாராருமே தமிழ் மொழிக்கு ஊறுசெய்கிருர்கள். பஸ், கார், சைக்கிள் போன்ற வேற்றுமொழி பொதுச்சொற்களைத் தமிழில் பயன்படுத்துவதை நான் ஆதரிக்கிறேன். இச்சொற்களுக்குப் பதிலாக பேருந்து, துவிச்சக்கர வண்டி போன்ற சொற்கள் பயன்படுத்தப்படுவதை நான் விரும்பவில்லை'' என்ருர்.

அவர் மேலும் கூறுகையில், எமது நாட்டில் உயர் கல்வி நிலை வளர தமிழ்மொழியிலேயே கல்வி போதிக்கப்படுகின்றது. சில இடங்களில் மருத்துவம் தமிழ்மொழியிலே போதிக்கப்படுகின்றன. பாடப்புத்தகங்களைஎழுதுவதில் ஆரம்பத்தில் கஷ்டங்கள் இருந்திருக்கலாம் ஆஞல் அவைகளை நாம் சமாளித்துவிட்டோம் என்ருர்;

டொமினிக்ஜீவா வெகு காலத்துக்குப் பிறகே இம்முறை தமிழ்நாட்டுக்கு வந்திருக்கிருர். இனிமேல் அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வந்து போகத் திட்டமிட்டிருக்கிருர். தமிழ்நாட்டிலுள்ள ஆக்க எழுத்தாளர்களுடன் அடிக்கடி கருத்துப் பரிமாற்றங்களை வைத்துக்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று அவர் கருதுகிருர்.

---

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

1972 ல் புதிய அரசமைப்புச்சட்டம் கொண்டுவரப்பட்ட போது கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் உறுப்பினராக அவர் இருந்துள்ளார் அதற்குப் பிறகு தமிழாராய்ச்சி மாநாட்டில் இடம்பெற்ற சம்பவங்களின் போதும் கம்யூனிஸ்ட் கட்சியில் அவர் இருந்துகொண்டு என்ன செய்தார்? இவ்வளவுக்கும் மேலாக அவர் காங்கேசன்துறை இடைத்தேர்தலில் ஒரு வேட்பாளராக அப்போதைய சுதந்திரக் கட்சி-கம்யூனிஸ்ட் கட்சி-சமசமாஜக்கட்சிக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்டார். எனவே அவர் குறிப்பிடும் இடதுசாரிகளின் நடவடிக்கைகளுக்கு அவரும் சமீபகாலம் வரை பொறுப்பாக இருந்துள்ளார்.

எனவே இவர்கள் செய்த பாவங்களுக்கு மக்கள் விடுதலை முன்னணியோ மக்களோ பொறுப்பேற்க முடியாது.

இவ்வாறு திரு. பொன் சேக்கா கூறிஞர்.

ஆயுர்வேத வைத்தியசாலை நிகழ்ச்சிகளுக்கு

# தொகுதி எம். பியை அழைக்காதது பற்றி கவலை

(பண்டத்தரிப்பு)

'எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள கைதடி ஆயுர்வேத வைத்தியசாலை 'வார்ட்' திறப்பு விழாவுக்கு தொகுதி பாராளுமன்ற உறுப்பினரோ அல்லது பொது மக்களோ கலந்துகொள்ள அழைக்கப்படாதிருப்பது மிகவும் கவலைக்குரியதாகும்' என்று வட இலங்கை சுதேச வைத்திய சபையின் செயலாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி கைதடி ஆயுர்வேத வைத்தியசாலை புதிய வார்ட் திறப்பு விழா தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

'கடந்த 40 வருடங்களாக வட இலங்கை சுதேசவைத்தியர்களினாலும், வைத்திய சங்களாலும இடைவிடாது அரசாங்கத்தை பூரணத்தும் வாய்ந்த ஆயுர்வேத வைத்தியசாலையை யாழ். மாவட்டத்தில் நிறுவவேண்டும் என்று கேட்கப்பட்டுவந்தது. இக்கோரிக்கை இன்று நிறைவேறுவதையிட்டு மிக மகிழ்ச்சியடைகின்றோம். இந்த முக்கியத்துவம் வாய்ந்த புதிய வாாட் திறப்பு விழாவுக்கு வைத்தியசாலை அமைந்துள்ள தொகுதியின் பாராளுமன்ற பிரதிநிதியை உத்தியோகபூர்வமாக அழைக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அறிகிறோம்.

ஆயுர்வேத ஆணையாளர் எமக்குத் தெரிவித்த தகவலின் படி எம். பி.யோர் அல்லது பொதுமக்களோ இத்திறப்பு விழாவுக்கு அழைக்கப்படவில்லை. இவ்வைத்தியசாலையின் எதிர்கால வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும், குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்கும் நாங்கள் தொடர்பு கொண்டு கருமமாற்றவேண்டிய தொகுதி எம். பி.யை திறப்பு விழாவுக்கு அழைக்காமல் விடுவது முட்டுக்கட்டையாக அமையும் என்று நாங்கள் கருதுகின்றோம்.'

# தமிழர் நிலங்களை தமிழரிடம் ஒப்படைக்கக் கோரி வழக்கு?

(யாழ்ப்பாணம்)

தமிழரின் பறிக்கப்பட்ட நிலங்கள் மீண்டும் தமிழர்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்று கோரி உயர்நீதிமன்றத்தில் லங்கா-பாரத ஒற்றுமை முன்னணி அமைப்பாளர் டாக்டர் ஏ. தர்மலிங்கம் வழக்கொன்றைத் தாக்கல் செய்யவிருக்கிறார்.

இந்த வழக்கை ஆதரித்து சாட்சிகளாகவும், சட்டத்தரணிகளாகவும் தோற்ற விரும்புவோர் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு அவர் அறிவித்திருக்கின்றார்.

1933-ம் ஆண்டிற்குப் பின்னர் தமிர்களின் பாரம்பரிய நிலங்கள் சிங்களக் குடியேற்றங்களால், சட்டவிரோதமாக பறிக்கப்பட்டுவருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரைகள் 12(1), 12(2), 14(ஏ) அர்த்தமுடையவைகளாக இருக்க வேண்மானால், தமிழரிடம் பறிக்கப்பட்ட நிலங்கள் மீண்டும் தமிழரிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் டாக்டர் தர்மலிங்கம் தெரிவித்துள்ளார்.

குறித்த உறுப்பினர்கள் விபரம் பற்றி டாக்டர் தர்மலிங்கம் குறிப்பிட்டுள்ளதாவது:-

உறுப்புரை 12(1):- சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லோரும் சமமானவர்கள்; அத்துடன் அவர்கள் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுவதற்கும் உரிதுடையவர்கள்.

உறுப்புரை 12(2):- இனம், மதம், மொழி, சாதி. பால், அரசியற்கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது இவற்றுள் எவை காரணமககவும் எந்தப் பிரஜைக்கும் ஓரங்காட்டுதல் ஆகாது.

உறுப்புரை 14(ஏ) இலங்கை முழுவதும் தடையின்றி நடமாடுவதற்கும், தான் விரும்பும் இடத்தில் வசிப்பதற்கும் ஆன சுதந்திரம்.

## குறள் ஆய்வு அரங்கு

(யாழ்ப்பாணம்)

வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் வள்ளுவர் மாமன்றம் நடத்தும் குறள்ஆய்வு அரங்கில் இன்று புலவர் ம. பார்வதிநாதசிவம் கருத்துரை வ்ழங்குவார்

கல்விப்பயன் என்றபொருளில் நடைபெறும் இவ்வாய்வரங்கு வள்ளுவர் மாமன்றத்தலைவர் திரு. கு. குருசாமி தலைமையில் நடைபெறும். ]கூ]

## பாலசுலோசனியின் அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி இசைக்கலை மன்றம் நடாத்தும் கல்லூரியில் திருமதி திரிபுரசுந்தரி யோகானந்தத்திடம் பரத நாட்டியம் கற்ற செல்வி பாலசுலோஜனி (மாலினி) பாலசிங்கத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த 25-ம் திகதி திங்கட்கிழமை மாலை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அரங்கில் பெருந்திரளான கலைஞர்கள் ரசிகர்கள் முன்னிலையில் சிறப்பாக நடந்தேறியது. இவ் அரங்கேற்றத்திற்குப் பிரதம விருந்தினராக் திரு. ஏ. கே. செந்தில்நாதன் (உதவிப் பணிப்பாளர் கம நலச்சேவை) தம்பதிகள் கலந்து கொண்டனர். திரு. செந்தில்நாதன் தலைமையுரை வழங்கினார். சாவகச்சேரி மாவட்ட பதில்நீதிபதி திரு. எஸ். கே. திரவியநாயகம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார் நீதிபதி திரு. க. ஞானச்சந்திரனும் இசைமணி திரு. வே. நடேசனும் ஆசியுரை வழங்கினார்கள் திருமதி பாலசிங்கம் நன்றியுரை வழங்கினார்.

## பயிற்சிநெறி 2-ம்திகதி ஆரம்பம்

(பண்டத்தரிப்பு)

லங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி புதிய மாணவருக்கான பயிற்சி நெறி எதிர்வரும் (2-10-78) திங்கட்கிழமை ஆரம்பமாகிறது. கல்லூரி அதிபரும், வட இலங்கை சுதேச வைத்திய சபைத் தலைவருமான டாக்டர் ஆர். ஈ. டதள்யூ. யகோரத்தினம் தலைமையில் நடைபெறும் இப் பயிற்சிநெறி ஆரம்பவிழாவில் ஆயுர்வேத ஆணையாளர் திரு. பி. பி. வெகரகொட கலந்து கொண்டு உரையாற்றுவார் என்று தெரிகிறது.

பல்கலைக் கழகத்துக்கு

## விழிப்புலனிழந்த முதலாவது தமிழ் மாணவி

(உடுப்பிட்டி)

விழிப்புலனிழந்த செல்வி மங்களராணி கிறிஸ்ரோப்பர் என்னும் மாணவி இலங்கைப் பல்கலைக் கழக யாழ். வளாகத்தில் கலைப் பிரிவுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கையின் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது விழிப்புலன் இழந்த தமிழ் மாணவி இவரென்பது குறிப்படத்தக்கது.

கரவெட்டி திரு இருதயக் கல்லூரி ஆசிரியர் திரு. கிறிஸ்தோப்பரின் புதல்வியான இவர் ஆரப்பக் கல்வியை கைதடி நவ்வீல்ட் பாடசாலையிலுப், உயர் கல்வியை பருத்தித்துறை மெதடிஸ்த உயர் கல்லூரியிலும் பெற்றார்

# சரித்திரம்படைத்த பாப்பரசர்

## யாழ். எம். பி. அனுதாபம்

[யாழ்ப்பாணம்]

''புதிய பாப்பரசர் பதவியேற்று சில நாட்களேயாறுலும் அவரது எளிமையான செயற்பாட்டின் மூலம் வரலாறு படைத்தார். காலஞ்சென்ற 6-வது அருளப்ப சின்னப்பர்''

இவ்வாறு யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் 6-வது அருளப்ப சின்னப்ப பாப்பரசர் அமரரானதையொட்டி விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் கூறியுள்ளார்.

''அமைதியினதும் எளிமையினதும் உறைவிடமாகத் திகழ்ந்த 6-வது அருளப்ப சின்னப்ப பாப்பரசரிடம் இருந்து உலகம் எவ்வளவோ சாதனைகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில் அன்னரின் திடீர் மறைவு உலகுக்கே பேரதிர்ச்சியை கொடுத்துள்ளது. அன்னரது மறைவால் துயருறும் உலக மக்களுடன் தமிழ் கூறு நல்லுலகமும் சேர்ந்து தமது துயரை கண்ணீர் அஞ்சலியாக அவருக்கு செலுத்துகிறது. என்றும் அவர் தமது செய்தியில் கூறியுள்ளார். (கி-அ)

பாப்பரசர் மரணம்

## பாரத ஜனாதிபதி அஞ்சலி

புதுடில்லி, செப். 30

புனித பாப்பரசர் முதலாவது அருளப்ப சின்னப்பரிடமிருந்து பலவற்றை எதிர் பார்த்திருந்த வேளையில் அப் பணிகளை அவர் நிறைவேற்றுமுன் அவரை விதி நம்மிடமிருந்து பறித்துச் சென்றுவிட்டது.

இந்திய ஜனாதிபதி திரு. நீலன் சஞ்சீவரெட்டி பாப்பரசரின் மறைவுகுறித்து வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ)

# எட்டாவது வளாகம்; இன்று திறப்புவிழா

(கண்டி)

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் எட்டாவது வளாகத்தை இன்று காலை கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்தின திறந்துவைப்பார்.

பொல்கொலையில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் அமையும் இந்த தும்பறை வளாகத்தில் கலைத்துறையில் எழுநூறு மாணவர்கள் உடனடியாக அனுமதிக்கப்படுவார்கள் என்றும், மற்றைய பீடங்கள் விரைவில் ஆரம்பித்துவைக்கப்படடுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

......

## மாதம் 500

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாக இருந்தார்கள். எனது கடமையை செய்வதற்கு பொலிஸாரும், சிறுவர் நன்நடத்தைப் பாதுகாவலர்களும் உதவியாக இருந்தார்கள்.''

சட்டத்தரணிகள் சார்பில் உரையாற்றிய சட்டத்தரணி எஸ். கனகரத்தினம் பேசுகையில்; யாழ்ப்பாணத்தில் திடீர் மரணவிசாரணை அதிகாரியாக நியமனம்பெற்ற நீங்கள் நீதி வழுவாது நேர்மையுடன் பணியாற்றியதே இந்த உயர் பதவிக்கு உயர்த்தியது. நீங்கள் அட்போது அரசிடமிருந்து ஒரு சதமாவது கோரி விண்ணப்பிக்காமல் கடமை செய்தீர்கள்'' என்றார். (கி)

## லண்டனில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கையில்; லண்டன் மகாநாடு பற்றி மிகுந்த ஆர்வம் கொண்டு பல வெளிநாட்டு அறிஞர்கள் தொடர்பு கொண்டுள்ளனர் என்றும குறிப்பாக ஜப்பான், சோவியத்யூனியன், சீனை, அமெரிக்கா, செனகல், மலேசியா, இந்தியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள், தாங்களும் மகாநாட்டில் கலந்துகொண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகள் படிக்க விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும் கூறினர்

லண்டன் தமிழாராய்ச்சி மகாநாடு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்திய தொலைபேசிக் கட்டண உயர்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கான தொலைபேசிக் கட்டணங்களை, தபால் அமைச்சு உயர்த்தியுள்ளது. இவை இன்று முதல் அமுலாகும்.

சாதாரண தொலைபேசிக் கட்டணம் 9 ரூபாயிலிருந்து 18 ரூபாவாகய்க்கும் அவசர அழைப்புகளுக்கு 18 ரூபாயிலிருந்து 36 ரூபாய்க்கும் நுண்அலைத்தொலைபேசி அழைப்பு 64 ரூபாவிலிருந்து 84 ரூபாய்க்கும் உயர்த்தப்பட்டுள்ளது. [கெ]

கைதடியில்

## நாளை திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையின் புதிய வார்ட் திறப்பு விழா நாளைக்காலை ஒன்பது மணிக்கு சம்பிரதாய முறைப்படி நடைபெறும் புதிய வார்ட்டை ஆயுர்வேத ஆணையாளர் திரு. பீ. வெரஹொட திறந்து வைப்பார்.

விழாவில் சகல ஆயுர்வேத வைத்தியர்களையும் பொதுமக்களையும் கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சித்த ஆயுர்வேத டீ. ஏ. எம். எஸ் பட்டதாரிகள் சங்கம் வேண்டியுள்ளது.

வைபவங்களை யொட்டி ''ஈழநாடு'' நாளை சிறப்பு மலரொன்றை வெளியிடும்.

இழ்விழா முன்னர் இரு தடவைகள் அமைச்சர்களின் வருகைதாமதகாரணமாக ஒத்திவைக்கப்பட்டதுவாசகர்கள் அறிந்ததே. (கெ)



'விஜயா சினி ஆட்ஸ்' அளிக்கும் ''அன்றொரு நாள்'' படத்தில் பொலிஸ் கமிஷனராக நடிக்கும் மேஜர் சுந்தரராஜனும் கதாநாயகன் ஏ. எஸ். பி சணேஷாச நடிக்கும் டாக்டர் இந்திரகுமாரும் தோன்றும் காட்சி இது. முழுக்க முழுக்க ஈழத்து தயாரிப்பு ஒன்றில் தமிழக நடிகர் ஒருவர் நடிப்பது இதுவே முதல் தடவையாகும். இப் படத்தின் டைரக்டராகவும் காமராமனாகவும் ஏ. வி. எப. வாசகம் கடமையாற்றுகிறார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 389 - Registered as a Newspaper in SriLanka.